ஆரம்பக் கல்வி

உ 5-6

ஆகஸ்டு, செப்டம்பர் 1934

JL
T15ம211,N33
N34·2·5-6
190337

1229

# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

OFFICE ... 10 JUN 195...

பொருளடக்கம்


| | |
|---|---|
| கடவுள் வணக்கம் .... | 97 |
| ஆசிரியர்கள் கடமை .... | 98 |
| பண்டைய கல்வி .... | 104 |
| சாம்பியன் ஸ்கீம் .... | 108 |
| வைணவ சமயம் .... | 110 |
| காய்ச்சல் .... .... .... | 114 |
| மனோநிலைமை .... .... | 119 |
| உதயகுமாரன் .... .... | 125 |
| கல்விச்சபைகள் .... | 129 |
| தலைமை உபாத்தியாயர் | 130 |
| ஆசிரியர் சம்பளம் .... | 133 |
| கல்விச் சட்டத் திருத்தம் | 137 |






TL T15 ம811, N33 N34.2.5-6 190337

உள் நாடு விலை அணு 1½ மலர் 5. 6. வெளி நாடு அணு 3.

## எமது இனிய தமிழ் பிரசுரங்கள்

[ஆக்கியோர் : மணி திருநாவுக்கரசு முதலியார்]

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் .... 0 2 6 | | | |
| இரண்டாம் ,, .... 0 3 0 | மூன்றாம் ,, .... 0 4 6 | | |
| நான்காம் ,, .... 0 5 6 | ஐந்தாம் ,, .... 0 6 6 | | |

### பொற்காலக் கணிதம்

[டி. எஸ். இராகவையர்]

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் | 0 5 0 | மூன்றாம் புத்தகம் | 0 8 0 |
| இரண்டாம் ,, | 0 6 0 | நான்காம் ,, | 0 9 0 |

### இந்திய சரித்திர தீபம்

[சி. வி. நாராயண அய்யர், எம். ஏ., எல். டி.]

5-ஆம் வகுப்பு முதற் புத்தகம் 0 5 0
6-ஆம் ,, இரண்டாம் புத்தகம் 0 6 0

### சமூக வாசகம்

[ஆர். இராமையர், எம். ஏ., எல். டி.]

4-ம் வகுப்பு முதற் புத்தகம் 0 4 0
5-ம் ,, இரண்டாம் புத்தகம் 0 5 0

### நவீன சுகாதார வாசகங்கள்

[கே. இராஜம் அய்யங்கார், பி. ஏ., எல். டி., எம் எஜ். எஸ்.]

4-ம் வகுப்பு இரண்டாம் புத்தகம் 0 4 0
5 ம் வகுப்பு மூன்றாம் புத்தகம் 0 5 0

### அறநெறி விளக்கம்

(மணி. திருநாவுக்கரசு முதலியார்)

4-ஆம் வகுப்பு முதற் புத்தகம் 0 5 0
5-ஆம் ,, இரண்டாம் புத்தகம் 0 6 0
6-ஆம் ,, மூன்றாம் புத்தகம் 0 7 0

### ஒழுக்கத்தால் உயர்ந்தோர்

(மணி. திருஞானசம்மந்த முதலியார்)

4, 5-ஆம் வகுப்பு திருக்குறிப்புத் தொண்டர் 0 2 0
,, அதிபத்த நாயனார் 0 2 0
,, ஏனாதிநாத நாயனார் 0 3 0
,, நந்தனார் 0 5 0

**கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,**
திருவல்லிக்கேணி, சென்னை.

11 JUL 1935

உ

ஓம்: பரப்பிரஹ்மணே நம:

# ஆரம்பக் கல்வி

சென்னை மாகாணத்திலுள்ள ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் உயர்தர செந்தமிழ் மாதாந்த பத்திரிகை.

பத்திராதிபர் : **பி. வீரராகவன்**
(ஜில்லாக் கல்விச் சபை அங்கத்தினர்)

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

மலர் - 2. } 1934ஞு ஆகஸ்டு, செப்டம்பர். { இதழ் - 5, 6

## கடவுள் வணக்கம்

" தாராத வருளெலாந் தந்தருள மௌனியாய்த்
தாயனைய கருணைகாட்டித்
தாளிணையென் முடிசூட்டி யறிவிற் சமாதியே
சாசுவத சம்பிரதாயம்
ஓராமல் மந்திரமும் உன்னாமல் முத்திநிலை
ஒன்றோ டிரண்டெனாமல்
ஒளியெனவும் வெளியெனவும் உருவெனவு நாதமாம்
ஒளியெனவும் உணர்வுறாமல்
பாராது பார்ப்பதே யேது சாதனமற்ற
பரமவநு பூதிவாய்க்கும்
பண்பென் றுணர்த்தியது பாராமல் அந்நிலை
பதிந்தநின் பழவடியர்தம்
சீராயிருக்க நினதருள் வேண்டும் ஐயனே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

# ஆரம்ப கல்வியும் ஆசிரியர்கள் கடமையும்

என். வெங்கடாமணன், (ஜில்லா கல்விச்சபை யங்கத்தினர் சேலம்)

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாயிருப்பது ஆரம்பக்கல்வி யாகும். மக்கள் முதலில் ஆரம்பக்கல்வியைக் கற்றே மற்ற உயர்தரக் கல்விகளைக் கற்க வேண்டியிருக்கிறது. நாட்டின் சாமானிய மக்கள் அனைவரும் ஒரு சிறிது உலகிய லறிவு பெற வேண்டுமானால், ஆரம்பக் கல்வியாவது கற்க வேண்டுவது அவசியம். மேலும் ஒரு தேசத்தாரனை வரையுமே உயர்தரக் கல்வி கற்றோர்களாய் செய்வது முடியாத காரியம். ஒவ்வொருவரும் தாய் மொழியில் எழுதவும், கணக்குப் போடவும் தெரிந்து கொண்டு, அதன் மூலமாய் பூகோளம், தேச சரித்திரம், துரைத்தன முறை, பூத பௌதிக சாஸ்திரம், சுகாதாரம் முதலியவற்றில் ஆரம்ப அறிவையாவது பெற முயல வேண்டும். இதுவே ஆரம்பக் கல்வி யெனப்படும். மேலும் தற்போது நம்நாட்டுக்கு அளிக்கப் பட்டுவரும் அரசியல் சுதந்தரங்களின் பயனால், பொது மக்கள் தங்கள் ஓட்டுச் சுதந்தரத்தைக் கொண்டு தக்க பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களால் நாட்டின் அரசியலை நடத்த வேண்டியிருக்கிறது. இன்றைய நிலையில் நம்நாட்டில் பெரும் பான்மையான வாக்காளர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயிருந்து வருகின்றனர். அவர்களாலேயே அரசியல் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். எனவே, வாக்காளர்கள் தாய்மொழியிலாவது நன்கு எழுதப் படிக்க அறிய வேண்டியது அவசியம். தற்போது தாய்மொழியில் ஏராளமான பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுவதால், முதல் படிக்கத் தெரிந்தோர் அப்பத்திரிகைகளைப் படித்துத் தங்கள் அறிவை விருத்தி செய்துகொள்ள முடியும். ஆதலால், ஆரம்பக் கல்வியை நாட்டில் அதி தீவிரமாகப் பரவச் செய்வதற்கு அரசாங்கத்தாரும், ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளும், பொது ஜனங்களும் ஆரம்பாசிரியர்களும் அதிக கவனஞ் செலுத்திப் பாடுபட வேண்டும்,

190337



தற்போது வித்தியா இலாகா அதிகாரிகளின் நோக்கம் பொருட் செலவு ஒன்றைக் குறைப்பதில் முக்கியமாயிருக்கிறதன்றி, நாட்டின் கல்வியைப் பரப்புவதில் முதன்மை யடைவதாக ஊகிக்க முடியவில்லை. கல்வி இலாகா, முன்னர் துரைத்தனத்தாரின் நேர்ப் பார்வையின் கீழிருந்த காலத்தில் வேலை செய்ததைவிட, ஜனப் பிரதிநிதிகளாகிய மந்திரிகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், அத்துணைத் தீவிரமாக வேலை செய்வதில்லை யென்று சிலர் கூறுவதில் உண்மை யில்லாமற் போகவில்லை. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு புதிய மந்திரி கல்வி யிலாகாவுக்குத் தலைமை வகிக்கிறார். ஒவ்வொரு மந்திரியும் கல்வி யிலாகா முறைகளைத் தம் காலத்தில் ஒவ்வொரு விதமாக மாற்றி யமைக்க முயலுகிறார். அவ்வாறு அடிக்கடி திட்டங்களும், முறைகளும் மாறிக்கொண்டிருக்கின்றன வன்றி, நாட்டில் நிலையான அபிவிருத்திக்கு வழி தோன்றுவதைக் காணோம். சமீபத்தில் சாம்பியன் ஸ்கீம் என்ற சிக்கனத்திட்ட மொன்று அதிகாரிகளின் ஆலோசனையிலிருந்து வருகிறது. அத்திட்டத்தின் நன்மைகளைப் பற்றி அதிகாரிகளும் அதனால் நேரும் இடையூறுகளைப் பற்றிப் பொது ஜனங்களும் பிரசாரம் செய்து வருகின்றனர். எத்தகைய சீர்திருத்தத்திலும் நன்மை, தீமை இரண்டு ஏற்படுவது சகஜம். ஆனால் தீமையை விட நன்மை அதிகமாக விருக்கும் சீர்திருத்தங்களையே அறிவாளிகள் ஆதரிப்பார்கள். இன்றைய சாம்பியன் திட்டம் அமுலுக்கு வருமாயின் நூற்றுக் கணக்கான பாடசாலைகள் மூடப்படவேண்டுமென்றும், நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் வீட்டுக்குச் செல்ல நேருமென்றும் பல ஜில்லாக்களி னின்றும் புள்ளி விவரங்கள் வெளி வந்திருக்கின்றன. இத்திட்டத்தால் ஆரம்பக் கல்வி எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடையப் போகிறதோ போகப் போகத்தான் நிச்சயிக்க முடியும்.

ஆரம்பக் கல்வியைப் போதிப்பதற்கு எலிமெண்டரி லோயர் கிரேட்டில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பயன்பட மாட்டார்களென அதிகாரிகள் பலர் கருதி வருகின்றனர். சென்ற ஆண்டிலிருந்து லோயர் கிரேட்டில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஹையர் கிரேட் போதனா முறைப் பரீட்சைக்கு ஆஜராகித் தேர்ச்சியடையலா

மென்று அதிகாரிகள் உத்திரவிட் டிருக்கின்றனர். அவ்வாறு பரீக்ஷையில் தேறிய லோயர் கிரேட் ஆசிரியர்களின் தகுதி முன்னிலும் தற்போது எவ்வகையில் வளர்ந்து விட்டதோ நாம் அறிய முடியவில்லை. 1907-1914 ஆண்டுகளின் இடையில் லோயர், ஹையர் என்ற இரண்டு கிரேட்டுகளுக்கும் ஒரேவித பரீக்ஷைகள் நடைபெற் றிருப்பதாகத் தெரிகிறது. அப்பொழுது தேர்ச்சி பெற்ற லோயர் கிரேட் ஆசிரியர்கள் தற்போதிய ஹையர் கிரேட் பரீக்ஷைக்குச் செல்ல வேண்டு மென்பதில் என்ன நீதி யிருக்கின்றதோ காண முடியவில்லை. எனவே, அக்காலத்தில் பயின்ற லோயர் கிரேட் ஆசிரியர்களை ஹையர் கிரேட்டாக ஏன் அங்கீகரிக்கலாகாது? 1914 ஐருக்கு பிற்பட்ட ஆண்டுகளில் கூட லோயர், ஹையர் கிரேட் பரீக்ஷைகளுக் குரிய பாடத்திட்டங் களில் அதிக வித்தியாசங்கள் இல்லை யெனக் கூறப்படுகிறது. கணக்கு, பூகோளம், சரித்திரம், சைன்ஸ், தமிழ், சித்திரம், போதனை முறை முதலிய பாடங்களில் லோயர் கிரேட்டில் படித்தவற்றைத் தான் ஆசிரியர்கள் தற்போது ஹையர் கிரேட் பரீட்சைக்குப் படித்து ஆஜராவதாகத் தெரிகிறது. பாடபுத்தகங்கள் வெவ்வேருக விருக்கலாமாயினும் பாடத்திட்டத்தில் அதிக பேதத்தைக் காண முடியுமோ யோசிக்க வேண்டும். ஹையர் கிரேட் பரீட்சைக்கு ஆங்கிலத்தை ஒரு கட்டளைப் பாடமாக்கி யிருந்தாலாவது ஒரு நியாயம் விளங்கி யிருக்கும். மேலும் ஹைஸ்காலில் மூன்ருவது பாரம் படித்து முடித்த மாணவர்களுக்குள்ள ஆங்கில அறிவு, ஹையர் எலிமெண்டரி ஸ்கூலில் எட்டாவது வகுப்பைப் படித்து முடித்த மாணவர்களுக்கு இல்லை. எனவே மொத்தத்தில் லோயர் கிரேட்டில் பயின்ற ஆசிரியர்களில் ஐந்து வருஷங்களுக்கு மேற்பட்ட காலமான சர்வீஸ் வாய்ந்த ஆசிரியர்க ளின்வரையும் டிப்டி இன்ஸ்பெக்டர்களின் சிபார்சை யனுசரித்து ஹையர் கிரேட் ஆசிரியர்களாக ஏன் அங்கீகாரம் செய்யலாகாது? தற்போது லோயர் கிரேட் ஆசிரியர்களுக் களித்த அனுகூலத்தைப் போல் ஐந்தாவது, ஆருவது பாரம் வரையிற் படித்து எலிமென்டரி ஹையர் கிரேட்டில் பயின்ற ஆசிரியர்களுக்கு, செகண்டரி கிரேட் போதனை முறைப் பரீக்ஷைக்கு ஆஜராவதற்கு அதிகாரிகள் அனுமதிக்க லாகாதா? இத்தகைய விஷயங்களை அனுபவம் மிக்க ஆசிரியர்கள் பத்திரிகைகளின் மூலமாக ஆராய்ந்தும், மகா நாடுகளைக் கூட்டி விவாதித்துத் தீர்மானங்கள் செய்தும் பயன்பெற முயற்சிக்க வேண்டும்.



ஆரம்பாசிரியர்கள் கூடும் கூட்டங்களில் பெரும்பாலும் தங்களுக்குத் தேவையான சம்பள வாவு முதலியவற்றைப் பற்றிப் பேசித்தீர்மானங்கள் செய்கிருர்களன்றி, ஆரம்பக் கல்வித் திட்டத்தைப் பற்றியோ, போதனை முறைச் சீர்திருத்தங்களைப் பற்றியோ, பாடபுத்தகங்களின் நேர்மையைப் பற்றியோ, உபாத்தியாயர்களின் ஒழுங்குகளைப் பற்றியோ சிந்தித்துத் தீர்மானங்கள் செய்ய முக்கிய கவனஞ் செலுத்துவதில்லை யென்று, எனது அனுபவத்தை யொட்டிக் கூற நேர்ந்ததற்கு வருந்துகின்றேன். நாட்டின் முன் போக்கிற்கு அஸ்திவார மிடுபவர்கள் ஆரம்பாசிரியர்களே யாதலால், அவர்கள் தங்கள் கடமைகளை நன்குணர்ந்து நடக்கவேண்டுவது இன்றி யமையாத தாகும். போதனை முறையிற் தேர்ச்சி யுற்றதாலேயே தங்கள் கல்வி பூர்த்தி யடைந்து விட்டதாக அநேக ஆசிரியர்கள் நினைக்கின்றனர். அதனுல் மேன்மேலும் படித்துத் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளாமல் வாளா யிருக்கின்றனர். அரசியல், சமூகஇயல், பொருளாதாரம், வர்த்தகம் கைத்தொழில், விவசாயம், விஞ்ஞானக்கலை, உலக நிலை முதலியவற்றில் ஆசிரியர்கள் அறியவேண்டிய உண்மைகள் ஏராளமாக விருக்கின்றன. தற்போது தாய் மொழியிலேயே இத்துறையில் அறிவு பெறுவதற்கேற்ற நல்ல நூல்கள் பல வெளி வந்து கொண்டிருக்கின்றன. மேலும் ஒவ்வொரு ஆசிரியரும் சமாசாரப் பத்திரிகைகளைப் படித்துவரத் தவறுதல் கூடாது. இக்காலத்தில் பத்திரிகைப் படியாதவன் பாதி மனிதனே யாவான். உலக வர்த்தமானங்களை அவ்வப்போது அறிந்து கொள்ளாத ஆசிரியர் உண்மையில் நாட்டுக்குப் பயன்பட மாட்டார்.

ஒவ்வொரு ஆரம்பப் பாடசாலையிலும் கூடியவரையில் நல்ல அறிவு தரும் பல புத்தகங்களைச் சேகரித்துப் புத்தகாலயமொன்று ஏற்படுத்த வேண்டுதவசியம். பத்திரிகைகளையும் அதற்கு வரவழைக்கலாம். அப்புத்தகாலயத்தைப் பாடசாலை மாணவர்களுக்கே யன்றி பொது மக்களுக்கும் பயன்படச் செய்யவேண்டும். அவ்வாறு வேலை செய்யும் பாடசாலைகளுக்கு (கிராண்ட்)

பாடசாலைகளாயின் அதற்கெனப் பிரத்தியேகமாகக் கிராண்ட் கொடுத்தும், போர்டு பாடசாலைகளாயின் அதற்குச் செலவாகும் தொகையைக் கொடுத்தும் துரைத்தனத்தார் உதவி புரிய வேண்டும். தற்போது புத்தகாலயங்களின் வளர்ச்சிக்குரிய திட்டமொன்று சட்டசபையிலும் அதிகாரிகளிடையிலும் ஆலோசனைக்கு வருமெனத் தெரிகிறது. அதில் இதற்குரிய திருத்தங்கள் செய்யப்படுமாறு ஆசிரியர்களும், பிறரும் முயற்சி செய்ய வேண்டும்.

ஆரம்ப பாடசாலைகளில் வைக்கப்படும் பாட புத்தகங்களைப் பற்றியும் ஆசிரியர்கள் சிந்திக்க வேண்டும். "ஆரம்பப் பாடசாலைகளும் பாடபுத்தகங்களும்" என்ற பெயரால் இப்பத்திரிகையிலும் உத்தம பாளையம் "பாரதி" பத்திரிகையிலும் நான்கு மாதங்களுக்கு முன்னர் யான் எழுதியுள்ள விரிவான கட்டுரைகளைக் காண்க." டெக்ஸ்டுபுக் சங்கத்தாரால் அங்கீகார முத்திரையைப் பெற்றுப் புற்றீசல்கள் போல வெளி வந்துள்ள பாட புத்தகங்கள் பலவற்றில் காணுங் குறைகளைப் பற்றி, ஆசிரியர்கள் தனித் தனியே குறை கூறிப் பேசுகின்றனரே யன்றி, வெளிப் படையாகக் கண்டிக்க முற்பட்டார்களில்லை. ஆரம்பாசிரியர்களாக விருந்து பாடபுத்தகங்களை உண்மையில் உபயோகிப்பவர்களுக்கே அவற்றின் தகுதியும், பயனும், குறைபாடுகளும் நன்கு புலனாகும். எனவே, ஆரம்பப் பாடசாலைகளுக்குரிய பாடபுத்தகங்களை அங்கீகாரம் செய்வதற்கு முன்னர் டெக்ஸ்டுபுக் சங்கத்தார்கள் தமிழ் மாகாண ஆரம்பாசிரியர்களின் பிரதிநிதிக ளடங்கிய ஒரு கமிட்டியாரின் அபிப்ராயத்தை யறிந்து கொள்ளுமாறு ஏன் செய்யலாகாது? அல்லது ஆரம்பக் கல்விப் பாடபுத்தகங்களைப் பொறுத்த அளவில் அபிப்பிராயங் கூறுவதற்கு தகுதியும், அனுபவம் வாய்ந்த ஆரம்பாசிரியர்களின் பிரதிநிதிகள் இரண்டொருவருக்கு டெக்ஸ்டு புக் கமிட்டியில் இடம்பெற முயற்சிக்கலாகாதா? ஜில்லா போர்டு அதிகாரிகளும், முனிசிபல் சபைத் தலைவர்களும், தங்கள் இஷ்டம் போல் ஒவ்வொரு வருடமும் பாடபுத்தகங்களை மாற்றி யமைத்து, அவற்றையே தங்கள் தலைமைக்கு உட்பட்ட பாடசாலைகள் அனைத்திலும் படிப்பிக்க வேண்டுமென்று உத்திர விடுகின்றனர். இதனால் நேருங் குறைபாடுகள் பலவாகும். எனவே ஸ்தலஸ்தா



பன அதிகாரிகள் ஆசிரியர்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்தே பாட புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து அமைக்கச் செய்ய வேண்டும்,

ஆங்காங்கே சில ஜில்லாக்களில் ஜில்லா கல்விச் சங்கத்தில் ஆசிரிய மானேஜர்களுக் கென இரண்டு ஸ்தானங்கள் துரைத்தனத்தார் கொடுத்திருக்கின்றனர். இது காறும் ஜில்லாவில் பல தாலூக்கா போர்டுகள் இருந்தன. அத்தாலூக்கா போர்டுகளினின்றும் தனித்தனியே ஜில்லா கல்விச் சபைக்கு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். தற்போது தாலூக்கா போர்டுகள் அனைத்தும் ஜில்லா போர்டில் அடங்கி விட்டன. எனவே ஜில்லா போர்டு ஒன்றுக்கே பல தாலூகா போர்டுகள் பெற்றிருந்த ஸ்தானங்கள் அனைத்தையும், ஜில்லா கல்விச் சபையில் கொடுப்பதென்பது எவ்வாறு நியாயமாகும்? ஆகவே, இனி ஜில்லா கல்விச் சபையில் ஆசிரிய மானேஜர்களுக்கு அதிகப் படியான ஸ்தானங்கள் கொடுக்கப்பட வேண்டுவது அவசியமாகும். இதை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுபோக வேண்டுவது ஆசிரிய மானேஜர்களின் கடமையாகும். ஒவ்வொரு ஆரம்பாசிரியரும் அல்லது ஒவ்வொரு ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் சேர்ந்து தம்தொழில் முறைக்கு உதவியாக வெளிவரும் "ஆரம்பக் கல்வி" போன்ற சில பத்திரிகைகளைத் தொடர்ச்சியாக வரவழைத்துப் படித்துவர வேண்டுவது அவசியமாகும். இன்னோன்ன கடமைகளை ஆரம்பாசிரியர்களாகிய நாம் உணர்ந்து நடந்தால் ஆரம்பக் கல்வியும், ஆசிரியர்கள் நிலையும் உயர்வடையச் சந்தேகமில்லை யெனக்கூற விரும்புகின்றேன்.

# பண்டைய கல்வி முறைக்கு நிகரில்லை!

15—9—34 (தின மணி)

இராமநாதபுரம் ஜில்லா ஆரம்ப ஆசிரியர்கள் மகாநாடு இராஜபாளையத்தில் கூடியபொழுது அக்கிராசனரான ஸ்ரீ. பி. எஸ், குமாரஸ்வாமி ராஜா அவர்கள் செய்த தலைமைப் பேருரையின் சுருக்கமாவது :—

இன்று இம்மகாநாட்டில் அக்கிராசனம் வகிக்கும் பெரும் பேற்றை எனக்கு நல்கியதுபற்றிப் பெருமிதங் கொள்வதுடன் என்னைக் கௌரவித்ததற்கு உங்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

## ஆரம்பாசிரியர்கள்

உங்களை ஆரம்பாசிரியர்களென்று அழைக்க நான் சம்மதிக்கவில்லை. 'ஆரம்பம்' என்ற சொல் எதனை உணர்த்துகின்றது என்று ஆலோசனை செய்து பாருங்கள். 'எலிமெண்டரி' அல்லது 'பிரைமரி' என்ற ஆங்கிலச் சொல்லின் நேர் மொழிபெயர்ப்பாயிருக்கலாமோ என்று ஒரு சந்தேகம். 'எலிமெண்டரி' என்ற சொல்லுக்கு 'மூல' என்று அர்த்தப்படும். எலிமெண்டரி ஸ்கூல் என்றால் மூலாதாரப் பாடசாலை என்று பொருள் படுத்தலாம். இவ்வாறு பொருள் கொள்ளுதலே மிகவும் பொருத்தமுடையதென்பது என்னுடைய அபிப்பிராயம். அன்றி ஆரம்பம் என்று பொருள் கொள்வீர்களானால் எதற்கு ஆரம்பம் என்றும் அடுத்த கேள்வியானது பல விடைகளுக்கு இடம் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. மேலும் அதில் முற்றுப் பெறும் ஒருவிதக் கல்வியை அது குறிக்கவில்லை. ஆரம்பக் கல்வி என்பது ஏதோ பிறிதொன்றுக்கு ஆரம்பம் என்று அர்த்தப்படுமேயொழிய, அது மிகவும் உயர்ந்த ஆராய்ச்சித் துறைகள் பயில இயலாதவர்களுக்கும் உலகியல் ஞானத்திற்குப் போதுமான அறிவூட்டக்கூடிய கல்வியென்று அர்த்தப்படாது. அதுவுமல்லாமல் ஆரம்பக் கல்வி என்பது தற்போதுள்ள பிரிவினைக்கு ஒத்திருப்பதென்பதும் உண்மையல்ல. ஆரம்பக்கல்வி, நடுத்தரக்கல்வி, உயர்தரக்கல்வி என்று முப்பிரிவுகளாக இயங்கும் நம் நாட்டுக் கல்வி முறையில், ஆரம்பம் எலிமெண்டரி என்பது சில சமயங்களில் புதிய ஐந்தாவது வகுப்புடனும் சில சமயங்களில் புதிய எட்டாவது வகுப்புடனும் முடிவடைகிறது.



நடுத்தரம் என்பது பத்துடன் முடிவாகிறது. உயர்தரக் கல்வி என்பது பத்திற்கு மேற்பட்டது.

### நடுத்தர படிப்பின் பயன்

இந்தப் பிரிவினை முறையில் யாதும் பொருளில்லை. ஏனெனில் பத்து வரையுள்ள நடுத்தரக் கல்வியென்பது ஆரம்பக்கல்விக்கு எவ்விதத்திலும் மேம்பட்டதல்ல. நடுத்தரக் கல்வியுடன் கல்வியை நிறுத்திய ஒருவன் அதன் துணைகொண்டு ஒரு விசேஷத் தொழில் புரியச் சக்தியற்றிருக்கிறான். ஏதோ ஆங்கில ஞானம் மட்டும் சிறிது விசேஷமாக இருக்கும் என்பதைத் தவிர (அதுவும் இப்போது உறுதியாகச் சொல்வதற்கில்லை.) மற்றப்படி அக்கல்வியே காரணமாக ஒரு தொழிலை இயக்க போதிய சக்தியளிக்க வல்லமை பெற்றிருக்கவில்லை. இதையறிந்தே மேனாட்டுக் கல்வி முறையை நம்நாட்டுக்களித்த புண்ணியவான்கள் இன்டர்மீடியேட் என்று ஒரு தரம் தடுத்திருக்கிறார்கள். இன்டர்மீடியேட் என்ற தரம் எதற்கு மத்தியிலுள்ள தரம் என்று எனக்குப் புலனாவதில்லை. உங்களில் யாரும் அதை ஆராய்ச்சி செய்திருந்தால் நான் அவரிடம் தெரிந்து கொள்வேன். ஆனால் அப்படிப்பட்ட பலனற்ற ஒரு ஆராய்ச்சி நீங்கள் செய்திருப்பீர்களென்று நான் நம்பவில்லை. இந்த இன்டர்மீடியேட் மட்டும் படித்துத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மஹாராஜாக்களுடன் பிறந்த சகோதரர்களுக்கு 'சாமி' 'துரை' என்று சமாதானப் பேர்கள் இருப்பதுபோலகூட இவர்களுக்கு ஒரு பட்டமும் கிடையாது. நிற்க, பிரைமரி என்ற சொல், கல்வியின் தரத்தைக் காட்டுகிறது. அதாவது புதிய ஐந்தாவது வகுப்பே பிரைமரி வகுப்பு என்று சொல்லப்படுகிறது. ஆனால் தற்கால ஏற்பாட்டின்படி இந்த வகுப்புடன் எலிமெண்டரிப் படிப்புத் தீர்ந்துவிடவில்லை.

மேற்கூறிய காரணங்களால் ஆசிரியாகிய உங்களை ஆரம்ப ஆசிரியர்கள் என்று நான் கூற இசையவில்லை என்று சொல்லுகிறேன். வேறு ஒரு சரியான பெயர் கண்டுபிடிக்கும்வரை நீங்கள் உங்களை ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் என்றாவது ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களென்றாவது அழைத்துக் கொள்ளுங்கள். எக்காரணத்தை முன்னிட்டும் ஆரம்ப ஆசிரியர்கள் என்று அழைத்துக்கொள்ள வேண்டாம்.

## தற்கால பாலபாடங்கள்

நமது நாட்டின் ஆரம்பக்கல்வி முறையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். பாலர் வகுப்பு அதாவது தற்கால முதல் அல்லது 1-வது வகுப்பு என்று பிரிக்கப்பட்டிருக்கும் வகுப்பின் ஒரு வருஷத்திற்குரிய பாடமென ஒரு புஸ்தகம் அச்சிடப் பட்டிருக்கிறது. அதற்கு பாலபாடம் என்றும், முதற் புத்தகம் என்றும் பெயர். எழுத்துக்களைக் கற்பிப்பதே அப்புத்தகத்தின் நோக்கம். கற்பிக்கும் முறையும் புத்தகந்தோறும் வேறாக இருக்கிறது. உருவமுறை, ஒலிமுறை, இயற்கை முறை என்றும், தொடர்முறை, கிண்டர் கார்டன் முறை என்றும் பல முறைகள் இருக்கின்றன. ‘ட’ விலிருந்து ‘ப’ இலேசாகவரும் என்றும் — ஒரு கோடுதானே அதிகம் — ‘க’விலிருந்து ‘ச’ இலேசாக வருமென்றும் — வளைந்ததை நீட்ட வேண்டியதுதான் — படத்தைப் பார்த்து ‘இ’ என்று சொல்வது சுலபம் ‘இ’ என்றும், பூணூல் போட்ட மனித உருவத்தைக் கண்டு ஐயர் என்று சொல்வது சர்வ சாதாரணம் என்றும், முறை வகுத்துப் புத்தகங்கள் எழுதப்படுகின்றன. ‘வௌ’ என்னும் எழுத்தைக் கற்பிக்க குழந்தைகள் கண்டறியாத வௌவால் படத்தையும், ‘ஔ’ என்னும் எழுத்தைக் கற்பிக்க ஔவை என்னும் உருவெளித் தோற்றத்தையும், ஔடதம் எனச் சொல்லி இன்னதென இல்லாத ஒரு சீசாப் படத்தையும் அச்சிட்டிருக்கிறார்கள். சீசாவைப் பார்த்தமட்டில் சோடா பெருத்த இக்காலத்தில் குழந்தை ‘பாட்டில்’ என்றும் சீசா என்றும் சொல்லுமே தவிர ஒருகாலும் ‘ஔடதம்’ என்று சொல்லாது. விரிக்கிற் பெருகும்.

## பண்டைய முறையைப் பின்பற்றுக!

இந்த முறைகளைவிட நம் பண்டைய முறையாகிய மனப்பாடமே பெரிதும் நன்மை பயக்கக் கூடியதென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். ஒரு வருஷ முழுவதும் பாலபாடம் படித்த ஒரு பையன் வருஷக் கடைசியில் எல்லா எழுத்துக்களையும் தெரிந்துக்கொள்ள முடியாது. மனப்பாடம் வேண்டாம் என்று எண்ணுகிற புத்தக ஆசிரியர்கள் பக்கங்களில் உயிர் மெய் எழுத்துக்களை வரிசையாக அச்சிடுவானேன்? தாங்கள் சொல்லும் முறை தப்பென்றும், பண்டைய முறையே நல்லதென்றும் சொல்லுவதற்கு வெட்கி, மறைமுகமாகச் சொல்வது போல், எனக்குத் தோன்றுகிறது. பாலபாடப்படி, டங்கா, டமாரத்தைப் படித்துப்பின் அணில் ஆடு, உரல், ஊசலைக் கடந்து ஏணியில் ஏறுவதற்கு வெகு நாட்களாகி விடுகின்றன. ஏனென்றால் ‘அ’ அணிலில் இருக்கிறதென்றும், ‘உ’ உரலில் இருக்கிறதென்றும், கண்டுபிடிப்பது சாமான்யமல்லவே? எழுத்தின் ஒலியையும் வடிவத்தையும் தெரியாமல் அணிலிலும் உரலிலும் கண்டுபிடிக்கச் சொல்வது அநியாயச்செய்கையாகும். மிகப் பிரயாசையின்மேல் இம்முறையால் அகரவர்க்கத்தைக் கண்டுகொள்ளச் சொல்லும் பாதிகால வரையிலே பண்டைய முறைப்படி அகர வர்க்கத்தை ஒரு பாடசாலையில் மனப்பாடம், செய்யச் சொல்லி, பரீக்ஷை பார்த்தீர்களானால் 100-க்கு 80-பேர் இரண்டு நாட்களில் தெரிந்துக்கொண்டிருப்பது புலனாகும். அவ்வெழுத்துக்களை மற்றும் பத்து தினங்களில் எழுதத் தெரிந்து கொள்வார்கள். உயிரெழுத்துக்கள் மனப்பாடம் ஆனபின், உயிர் மெய் எழுத்துக்களைக் கற்பிக்க ஆரம்பம் செய்யும்பொழுது ‘க’ காவர்க்கம் ஒன்றை ஒரு ஆசிரியர் குழந்தைகளுக்குக் கற்பித்துவிட்டால் மற்ற வர்க்கங்களெல்லாம் தாமாகவே ஆற்று நீர் வழிதல்போல வந்துவிடுகின்றன. இம் முறையைக் கையாண்ட பாடசாலைகளில் மூன்று மாதக் காலம வரையில் கூர்மையான புத்தியுடைய பையன்களும், நான்கு மாதக் காலம் வரையில் யந்த புத்தியுடைய பையன்களும், கற்றுத் தேர்ந்து விடுவார்கள். எண்ணும் அப்படியே. திண்ணைப் பள்ளிக்கூடங்களில் ‘எண்சுவடி’ முறையில் எண்ணைக் கற்பிக்குங்கால் சுமார் ஒரு மாத காலத்திற்குள் பத்து வாய்ப்பாடும் சுலபமாகப் படித்து ஆறுமாத காலத்திற்குள் குளிமாற்றும், சதுரக் கணக்கும் படித்துவிடுகிறார்கள். நம்முடைய புதுமுறைப் பாடசாலைகளில் இரண்டாவது வகுப்பு முடியுங் காலத்தில் 10-வது வாய்ப்பாடு தெரிந்திருப்பது மிகவும் துர்லபமாக இருக்கிறது. மேற்கூறுபவற்றில் கல்வியின் முறையைப்பற்றிப் பல கேடுகளைக் குறித்தேனேயல்லாது, கற்பிப்பார் திறனைப் பொறுத்து ஏதுங் கூறியதாகக் கருத வேண்டாம். நாட்டில் ஆரம்பக் கல்வியைச் சீர்திருத்தம் செய்யச் சந்தர்ப்பம் பெற்றிருக்கும் நமது கல்வி மந்திரியாரும் மற்றும் உத்தியோகஸ்தர்களும் இது விஷயத்தைக் கவனிக்குமாறு எல்லாரும் வேண்டிக்கொள்வோம்.

# சாம்பியன் ஸ்கீம்

## எய்டட் பாடசாலைகளுக்கு ஆபத்து கிடையாதாம்

## (11-9-34) "ஹிந்து பத்திரிகை"

அகில இந்தியா கதோலிக் கிருஸ்தவ சபை காரியதாசியாகிய திரு. C. T. வர்கீ என்பவர். (Consolidation and Concentration of Elementary Schools)

ஆரம்பப் பாடசாலைகளுக்கு வந்துள்ள ஆபாத்தாகிய கன்ஸாலிடேஷன் ஸ்கீமைப்பற்றி கனம் கல்வி மந்திரியாரவர்களை பேட்டிக்கண்டு பேசினர். அவர் பேசிய பொழுது கதோலிக் கிரிஸ்தவ சங்கத்தின் சார்பாக மூன்று முக்கிய காரணங்களை எடுத்துக் காட்டினர். முதலாவது (Canon law) கேனன்லா பிரகாரம் கெதோலிக் குழந்தைகள் கெதோலிக் கிரிஸ்தவ ஆரம்பப் பாடசாலைகளில் தான் படிப்பிக்க வேண்டுமென்றும், கிராமாந்திரங்களில் இத்தகைய கிரிஸ்தவ பாடசாலைகள், தீண்டப்படாதவர்களுக்கும், தாழ்த்தப் பட்டவர்களுக்கும், செய்துவரும் ஊழியம் பட்ஜட் செஷனில் கனம் மந்திரி யவர்கள் இப்பாடசாலைகளைப் போற்றிப்பேசியதே போதுமான சாட்சியாகு மென்றும், மூன்றவதாக எய்டட் பாடசாலைகளை பொதுப் பாடசாலைகளுடன் (Public Schools) கலப்பதென்பது முடியாத காரியமென்றும், ஆனால் பாடசாலைகளில் சிக்கனச் சிலவில் திறமையாக கல்வியை

---

### ஆசிரியர்களின் நிலை.

இனி ஆசிரியர்களாகிய உங்களது நிலையைப் பற்றி சிறிது சொல்ல விரும்புகிறேன். நான் சொல்வன வெல்லாம் மிகவும் மேலான தேசத்தொண்டில் ஈடுபட்டுள்ள உங்களின் நன்மையைக் கருதியும், உங்களுடைய நிலைமையைச் சீர்திருத்த எனக்கு இருக்கும் ஆர்வ மிகுதியாலும், சொல்லப்பட்டவையென்றும் கருதி என்னை ஆதரிக்குமாறு வேண்டுகிறேன்.

நீங்கள் மேற்கொண்டிருக்கும் தொழிலுக்குப் போதிய ஊதியம் உங்களுக்குக் கிடைப்பதில்லை. ஊதியம் என்று சொல்லுவதும் மிகையாகும். உங்கள் உழைப்பிற்கு நியாயமாக ஏற்பட்ட கூலியே உங்களுக்குக் கிடைக்காமல் இருக்கும்பொழுது ஊதியங் கிடைப்பதில்லை யென்று சொல்வது எவ்வாறு பொருந்தும். குயவன் கைமண் போன்று பக்குவமாகச் சேர்த்து உருவாக்கி சூளையிலிட்டு உருப்படியாக்க வேண்டியது உங்களுடைய வேலையாக இருக்கிறது. வர்ணந் தீட்டுவதே மற்ற ஆசிரியர்களுடைய வேலை.



பிள்ளைகளுக்கு போதித்து, ஆரம்பக்கல்வியை பரப்பவேண்டுமென்கிற அரசாங்கத்தின் நோக்கம் எல்லோரும் பாராட்டத்தக்கதென்றும், அவ்விதமான கொள்கையுடன் நடந்துகொள்ளக் கூடியவை எய்டட் பாடசாலைகளை தவிர, பொதுப் பாடசாலைகளில் எக்காலத்திலும் அவ்விதம் நடந்துகொள்ள கூடாத காரியமென்றும், எடுத்துக் காட்டினர்.

இவைகளை யெல்லாம் நன்றாக கேட்டுணர்ந்த கனம் கல்வி மந்திரியார், இதைப்போன்ற ஆட்சேபனைகள் பல தமக்கு வந்திருப்பதாகவும், கன்ஸாலிடேஷன் ஸ்கீமை அமுலுக்கு கொண்டு வருங்காலத்தில், இவ்விதமான ஆட்சேபனைகளை அவசியம் கவனிப்பதாகவும், எவ்விதத்திலும், மிஷன், அல்லது மிஷன் அல்லாத எய்டட் பாடசாலைகள் ஏதற்கும் ஒருவித கெடுதல் நேரிடாதபடி தாம் பார்த்துக் கொள்வதாகவும், திரு. C. K. வர்கீ அவர்களுக்கு வாக்குறுதி செய்திருக்கின்றார்.

இத்தகைய வாக்குறுதியை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். பல ஆசிரியர்களும், எய்டட் பாடசாலை மனேஜர்களும் அடிக்கடி எமக்கு இந்த ஸ்கீம் அமுலுக்கு வருமா, வராதா, என்ற ஜோஸ்யத்தை தெரிவிக்கும்படி பல கடிதங்கள் எழுதிய வண்ணமாக இருக்கின்றனர். கனம் கல்வி மந்திரியாரவர்கள் வாக்குறுதியை நோக்குமிடத்து, எத்தகைய எய்டட் பாடசாலை மானேஜர்களும் தங்கள் மனதில் பயங்கொள்ள இடமில்லை. இதைப் போன்ற எத்தனையோ ஸ்கீம்கள் அரசாங்க மேஜைகளில் தூங்கிக் கொண்டிருக்கின்றன. சில சமயங்களில் யாராவது அவைகளை தட்டி எழுப்புவது வழக்கம். அப்பொழுது கோடை இடிகளைப்போல் சற்று ஆரவாரங்கள் உண்டாவது இயற்கை. உண்மையில் எந்த ஸ்கீமாவது நடைபெற வேண்டுமானால், ஆரம்பக்கல்வி உண்மையில் நமது நாட்டில் பரவவேண்டுமானால், அரசாங்கம், சில லட்சக்கணக்கான திரவ்வியத்தை ஆரம்பக்கல்விக்கென சிலவு செய்ய முன்வரவேண்டும். வயிற்றுக்கு சாப்பாடும் போடக் கூடாது, பிள்ளையும் இளைக்கக்கூடாதென்றால் எவ்வாறு முடியும். கிராண்டுகளை உயர்த்திக் கொடுக்க மட்டோம், ஆசிரியர்கள், மட்டும் அரைப்பட்டினியாகத் தான் சாகவேண்டும், ஆனால் ஆரம்பக்கல்வி மாத்திரம் விருத்தியாக வேண்டும், படிப்பும் நன்றாக இருக்க வேண்டுமென்றால் எவ்வாறு முடியும். இதைப்பற்றி அடுத்த இதழில் விஸ்தாரமாக எழுதுவோம்.

# வைணவ சமயம்

ஆசிரியர்:—ஸ்ரீமான் எஸ். கே. பார்த்தஸாரதி, பி. ஏ., பி. எல்.,
டிஸ்டிரிக்ட் முன்ஸிப், மன்னார்குடி

கடவுளை அடைந்து நாம் உஜ்ஜீவித்து முக்த நிலை யடைவதற்குச் சாதனமானவையே மதங்கள். அவ்வித மதங்கள் வெளிப் பார்வையில் முரண்படுவதாகத் தோன்றினும், தாயுமானவர் "ஆறு சமயங்கள் தோறும் வேறு வேறாய் நின்று ஆடும் உன் திருவினை யாவ ரறிவர்" என்று கூறியபடி கடவுளே ஒவ்வொரு மதத்திலும் இருக்கின்றார். கீதையில் 'எவ்வழியில் நீங்கள் வந்தாலும் அவ்வழியில் இருந்து உங்களை ஏற்றுக் கொள்கிறேன்' என்று பகவான் மாற்றம் இருக்கிறது. அவ்வித மதங்களில் விசேஷமான ஒன்று வைணவம்.

கடவுளை அடைவதென்றால் கடவுள் தன்மையைப் பொருந்துதல். அவ்வித குணங்களைக் கூட்டுவதே ஒரு மதத்தின் வேலை. "சாதுர்வர்ணம் மயா சிருஷ்டம் குண கர்ம விபாக:" "அந்தணர் என்போர் சான்றாண்மை பூண்டொழுகலால்", என்றபடி. ஆகையால், வைணவன் என்பவன் யார் என்று விசாரிப்போம். (விஷ்ணுபுராணம்—யமகிங்கர ஸம்வாதம்—காந்தியடிகள் 'வைஷ்ணவ ஜனதோ'):

சொல்வன் வைஷ்ணவன் யாரெனக் கேளாய்
சோர்ந்தவர் பீடையை அறிவானே
எல்லோர் தம் துக்கத்தை தீர்ப்பவ னாயினும்
எள் ளளவும் கர்வம் அடையானே
மன்னுயிர் மக்களை வந்தித்து நிற்பான்
மாசுறு நிந்தனை மொழியானே
சொன் மன முட லதில் நித்தம தானவன்
சோதி யுடல் மக்கள் என்போனே.

பாவனப் பார்வை ஸமத்வ முற்று
பர ஸ்திரீயைத் தாயெனப் பணிவானே
நாவினால் பொய் மொழி நவிலவு மாட்டான்
நொந்தும் பிறர் செல்வம் வேண்டானே



மாயையும் மோகமும் மாயும் அவன்பால்
மனத்தில் வைராக்கிய முறுவோனே
ஓயாமல் தேவனை உள்ளம் நினைந்திட
ஓதி உன்னி மன முருகுவோனே.

காமமும் லோபமும் கபடமும் கோபமும்
கனவிலு மில்லாத கனவானே
பாமார் சேர்ந்திட பற்பல கருமமும்
பகவனின் தொண் டெனச் செய்வோனே.

விஷ்ணு பக்தனாகிய வைஷ்ணவனை வர்ணிக்கிறேன். எவன் பிறருடைய துக்கத்தை யறிந்து அவருக்கு உபகாரம் செய்த போதிலும், தான் செய்ததாக மனதில் கர்வங் கொள்ள மாட்டானோ, எவன் உலகிலுள்ள எல்லோரையும் ஸமமாகப் பார்ப்பானோ, அவர்களை யெல்லாம் பகவானுடைய சரீரமென் றறிந்து வணங்குவானோ, எவன் பிறர்களுடைய பொருள் ஸ்திரீ முதலியவற்றில் ஆசை வைக்க மாட்டானோ, எவன் தன்னுடைய மனம் வாக்கு காயம் மூன்றையும் அடக்கி யாள்கின்றானோ, எவன் பகவானுடைய பெயரைக் கேட்டதுமே பக்தி பரவசனாகி விடுகின்றானோ, எவன் தன்னை அவருடைய கருவியாகக் கருதி எல்லா கருமங்களையும் அவருக்குக் கைங்கர்யமாகவே செய்கின்றானோ, அவனே வைஷ்ணவனாவான். பல சரீரங்களை யடையும் ஜீவனுக்கு மனித தேகம் கிடைப்பது கஷ்டம். அவ் விதமான பல ஜன்மங்கள் எடுத்த பிறகே வாஸுதேவனை பஜித்து எல்லாம் வாஸுதேவன் என் றறியும் விஷ்ணு பக்தனாக முடியும். அவ்வித விஷ்ணு பக்தனாவதற்கு நான் என்னுடைய காயம், வாக்கு, மனது, இந்திரியங்கள், புத்தி முதலியவைகளால் என்னென்ன செய்தாலும், என்ன உண்டாலும், என்ன யாகம் செய்தாலும், என்ன தானம் செய்தாலும், என்ன தபஸ் செய்தாலும். எல்லாவற்றையும் பரம் பொருளாகிய ஸ்ரீமந் நாராயணனுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும். நான் சிறந்த விஷ்ணு பக்தனாய் பாகவத உத்தமனாகவேண்டுமானால் எல்லாப் பிராணிகளிடத்தும், பகவான் இருக்கின்றார் என்று அறிந்து, எல்லோரையும் ஸமமாகப் வஸ்துக்களிடத்திலும் பாவித்து, என்னுடைய தேகத்தின் ஜன்மத்தாலும் தர்மத்தாலும் வர்ணாச்ரமங்களாலும் ஜாதியாலும், "நான்"

என்ற அஹங்காரம் கொள்ளாமல், ஒருவ ரிடத்திலும் த்வேஷ மில்லாமல், எல்லோருக்கும் மித்ரனாய், கருணையோடு கூடி, கெடுதி செய்பவர்க ளிடத்தும் பொறுமையையும் ப்ரீதியையுங் காட்டி, துக்கத்திலும் ஸந்தோஷத்திலும் ஸம நினைவுடையவனாய், கோபம் முதலியன இல்லாது, ஆனந்த மூர்த்தியாய், மனதை ஒரு வழிப் படுத்தி, என்னுடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் பகவா னுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும். — ப்ரபத்திமார்க்கம் — "ஸர்வதர்மான்" என்ற சுலோகம் பார்க்க.

மோக்ஷத்தில் சரீர இன்பங்கள் நுகர்வதில்லை; மனோ ஆனந்தம் கொள்வதும் மாத்திரம் இல்லை—நாம் மானிடத் தன்மை நீங்கி கடவுள் தன்மையாதல். விஷ்ணு உலகத்தை ரக்ஷிப்பதால் நாமும் அத்தொழிலில் சேர்கிறோம் இப்பொழுது முதல் பெண்கள் பிள்ளைகளாகிய நாம் அவருடன் கூட்டாளிகளாகிறோம். வேலை செய்யச் செய்ய மேலான வேலை கிடைக்கிறது. வேலைக்குப் பலன் வேலையே. கைங்கர்யமே வைணவனுடைய குணம், பெருமை, முக்தி, ஆனந்தம். — "ஓம் நமோ நாராயணாய."

எனக்கெனச் செயல் வேறிலை யாவு மிங்கொரு நின்
றனக்கெனத்தகு முடல்பொரு ளாவியுந் தந்தேன்
மனத்தகத்துள வழுக்கெலா மாற்றி யெம்பிரானீ
நினைத்த தெப்படி யப்படி யருளுத னீதம்.

உளவ றிந்தெலாநின்செய லாமென வுணர்ந்தோர்க்
களவி லானந்த மளித்தனை யறிவிலாப் புன்மைக்
களவுநாயினேற் கிவ்வண்ண மமைத்தனை கருத்துத்
தளருந் தன்மையின் காறொடும் புகலுவேன் றக்கோய்.

"என்னுயிரும் என்னுடலும் என்பொருளும் யானே
யிசைந்து கொடுத்திட வாங்கிவிட்டதன் பின் மகிழ்ந்தே
தன்னுயிரும் தன்னுடலும் தன்பொருளும் எனக்கேதந்து
கலந்தென்னைப் புணர்ந்த தனித்த பெருஞ்சுடரே."

ஒரு ஜன்மம் மாத்திரம் உண்டு என்னும் மதங்களிலும் (Grace) காருண்யம் (கிருபை) உண்டு என்று கூறியிருப்பினும், அக் கிருபை பக்ஷபாதத்தின் தன்மையதாகிறது. பல பிறப்பும் பிறந்து அப் பிறப்புகளில் கெட்டன செய்தும், ஜீவன் மனம் வருந்தி வேண்ட, கடவுள் கிருபை காட்டி ஜீவனை ரக்ஷிப்பதுவே விசேஷம். நாம் ஒரு அங்குலம் நகர அவர் ஒரு கெஜம் ஓடி வருவார். அக் குணத்தையே உவமைப்படுத்தி 'லக்ஷ்மி' என்று கூறியுள்ளது.



ஸ்திரீகள் மோக்ஷமடைவது ஸுலபம்; சூத்திரர்கள் மோக்ஷமடைவது ஸுலபம், ஏனெனில் கைங்கர்ய குணமும் தொழிலும் அவர்களிடம் உள்ளன. "கலி: ஸாது, ஸ்திரீ: ஸாது, சூத்திர: ஸாது." பல பிறப்புகளின் பின் வைணவத்வம் வந்து "வாஸுதேவ: ஸர்வம்" என்றறிந்து கிங்கரனாகிறான்; "கடவுள் ஆலயத்தைத் தாங்கும் தூண்களாகின்றான்" ("Pillars in the temple of my Lord") கடவுளுடன் ஒன்றுவது தன்மையிலும் வேலையிலும், கடவுளுடன் பாகஸ்தர்களாய் அவர் ராஜ்யத்தில் உரிமையுடையவர்களாய் உண்மை 'மகன்' ஆகிறோம். ராமலிங்க ஸ்வாமிகள் 'திருவருட்பா' வில் "சிருட்டிமுதல் ஐந்தொழில் நான் செய்ய எனக்கு அருள் புரிந்தாய்" என்கிறார். "புனிதமுறு சுத்த சன்மார்க்க நெறிகாட்டி மெய்ப்பொருளினை யுணர்த்தி யெல்லாம் ஏருற்ற சுகநிலை யடைந்திடப் புரிதி நீ யென் பிள்ளையாதலாலே யிவ்வேலை புரிக என்று இட்டனன்.

ஜாதி, குலம், முதலிய வித்யாஸமின்றி எல்லோர்க்கும் ஸம மதமான மதம் இம்மதம் ஆகையால் இதுவே உலக மதம். கடவுளின் முக்ய லீலை மதம். எல்லோரும் இம் மதத்தின் தத்வத்தை அனுஷ்டித்து பகவான் அருளால் எளிதில் நற்பதவி யடையலாம்.

கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் 1. (மன்னார்குடி)

# காய்ச்சல்

[டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்]

காய்ச்சல் கண்டவர்கள் களிமண்ணை அறைத்து உடம்பு பூராவும் தடவிக்கொண்டு சூரிய அனலில் காய்ந்து சுத்த நீரில் குளிப்பது ஏழை மக்களின் அனுபவ சிகிச்சை யாகும்.

எத்தகைய மண்டை குத்தலையும் களிமண் பத்தானது குணப் படுத்தி விடும். இம் முறையால் குணமாகாத தலைவலியே கிடையாது எனச் சொல்லலாம். இதற்குப் பணச் செலவு மில்லை. யாதொரு அஞ்சனத்தையும், பாமையும், மின்சாரத்தையும், மென் தாலையும், கற்பூரத்தையும், யூக்கலப்டஸ் எண்ணையையும், பணம் கொடுத்து வாங்கி உபயோகித்துக் குணமடையாமல், ஏமாந்து துன்பப்பட வேண்டாம் என்பது கருத்தானாலும் பணக்காரருக்கு இம்முறை ஏற்காது என்பது அனுபவம். அவர்களுக்கு டாக்டர்கள் கொடுக்கும் மருந்தே திருப்தியை யளிக்கு மாதலால் அவர்களைப் பற்றிய கவலை நமக்கில்லை.

சகல காய்ச்சலையும் போக்கக்கூடிய சஞ்சீவி நம் நாட்டில் தான் வசிக்கின்றது. அத்தகைய சஞ்சீவி ஒவ்வொரு வீட்டுப் புழக்கடையிலும் இருக்கின்றது. ஆனால் இதை நாம் உணர்ந்து கொள்ள முடியாமல் கோடிக்கணக்கான பணத்தை ஏழைகளின் கஷ்ட சாத்தியமான பொருளைக் கொய்னாவுக்காகவும், மற்ற மருந்துக்களுக்காகவும், கொட்டிக் கொடுத்துக் கப்பலேற்றி மேல் நாடு செலுத்தி அவர்களைக் குபேரர்க ளாக்குகின்றோம்.

இதைக் கண்ணுற்ற பிறகாகிலும் டாக்டர்களும், வைத்தியர்களும், மற்றவர்களும் இம் முறையைக் கையாண்டு அந்நிய நாட்டுக் கொய்னாவையும், பெனாசிடைனையும், ஆஸ்பைரினையும் அறவே நீக்குங்கள்.

இப்பத்திரிகையை வாசிக்கும் நண்பர்கள் இதரர்களுக்கும் இதன் உண்மையை எடுத்துரைத்து ஏழைமக்களைப் பிணியினின்றும் செலவின்றி காப்பாற்றும் முறையைக் கையாளச் செய்வீர்களாக,



புராணக் கதைகளில் கூறிய தேவலோகத்திலிருந்து பூலோகத்திற்குக் கொண்டுவரப்பட்ட புஷ்பத்தை ருக்மணியின் சிரசில் வைத்தபின், நாரதன் கலகத்தால் ராதா மனத்தைப் புண்படுத்தியதாகச் சொல்லும், பாரிஜாதம் என்னும் புஷ்பச் செடியை நீங்கள் அறிவீர்கள். இதனைப் பவழமல்லி என்றும் கூறுவர். இதன் புஷ்பம் சிவந்த காம்புடன் மல்லிகையைப் போல் நாலு பிரிவாகக் காணப்படும். புஷ்பத்தை ருக்மணிக்கும் செடியை ராதா வீட்டுப் புழக்கடையிலும், வைத்ததாக சொல்லும் கதையைக் கேட்ட உங்களுக்குப் பாரிஜாதச் செடியின் விவரத்தை விளக்க வேண்டிய அவசிய மில்லையென நினைக்கிறேன்.

பாரிஜாதச் செடியின் இலையில் கொஞ்சம் அதாவது $2\frac{1}{2}$ பலம் சட்டியிலிட்டு வறுத்து $\frac{1}{4}$ படி நீர் விட்டு $\frac{3}{8}$ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டிக்கொண்டு சுரம் உள்ளவர்களுக்கு 3 மணி நேரத்திற்கு ஒரு தரம் வேளைக்கு ஒரு அவுன்சு விகிதம் கொடுக்க இரண்டு நாளில் சகல சுரமும் நீங்கும்.

இதன் கியாழம் சிவப்பு நிறமாய் இரத்தக் கலராய்க் காணப்படும். இக்கலரானது இரத்தத்தில் உறவாகி இரத்தத்தைச் சுத்தம் செய்து, இருதயத்தைப் பலப்படுத்தி, மூளைக்கு வலுவைத்தரக்கூடியது மன்றி இரணங்களையும் ஆற்றி அதனால் ஏற்படும் சகல சுரங்களையும் போக்கும். இதற்கு யாதொரு பத்தியமும் இல்லை. நிர்ப்பயமாகக் கையாடலாம். அளவைக் கூட்டியும் குறைத்தும் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு $\frac{1}{2}$ அவுன்சு கொடுக்கவும், இரத்த விருத்திக்காகவும் இக் கியாழத்தை உபயோகிக்கலாம். பட்டை, வேர், புஷ்பம், ஆகிய இவற்றின் குணங்களை வேறு வியாசத்தில் எழுதுகிறேன்.

(தமிழரசு)

# சென்னை மாகாண ஜில்லாக்கல்விச் சபை அங்கத்தினர்கள் மகாநாடு

20-9-34 சென்னை ஜில்லா கல்விச்சபை கட்டிடத்தில் மேற்குறித்த மகா நாட்டை நடத்த ஒரு கூட்டம் கூடியது. திரு. திவான் பஹதூர், கல்விச்சபைத் தலைவர் ஜி. கோபதி நாருயணசாமி செட்டியார் தலைமை வகித்தார். கீழ்கண்ட விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன. தற்போது ஜில்லாக் கல்விச் சபைகளுக்கு கிராண்டு விஷயங்களிலும், போர்டு, முனிசிபல் பாடசாலைகளை நிர்வகிக்கும் விஷயங்களிலும், கல்வி யதிகாரிகள் கல்விச் சபைகளினிடத்து நடந்து கொள்ளும் விஷயங்களிலும், அரசாங்கத்தார் போதுமான அதிகாரம் கொடாமையைப் பற்றி ஆலோசித்து, சில தீர்மானங்கள் செய்து அரசாங்கத்திற்கு தெரிவித்து, ஆரம்பக்கல்விச் சட்டத்தை சீர்திருத்தவேண்டு மென்பது அம்மகா நாட்டின் நோக்கம். இம்மகா நாட்டிற்கு கீழ்கண்ட காரியஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இம்மகாநாடு நவம்பரில் சென்னையில் கூடும்.

தலைவர் — திவான் பகதூர். ஜி. கோபாதி நாருயணசாமி செட்டியார்.

Riception Committee Chairman,

S. G. ரங்கராமாநுஜ முதலியார். B. A. B. L.

Secreteries.

1. P. வீராகவன். (ஆரம்பக்கல்வி பத்திராதிபர்)
2. அப்துல்மஜீத். B. A.
3. N. A. நடேச முதலியார்

Treasuerer.

K. இருமாநுஜம்பிள்ளை.

(சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் சங்கக் காரியதரிசி)



## பாடசாலை கட்டடம், பெஞ்சு நாற்காலி கிராண்டுகள்

G. O. No. 1597. L' E (6-7-34)

Building and equipament grants - Ele. Schools— Admissionof applications permitted

G. O. No, 1616 — 11-9-31. உத்திரவு தற்போது ரத்து செய்து விடப்பட்டது. இனி பாடசாலை கட்டிடங்களுக்கும், பெஞ்சு நாற்காலி முதலியவைகளை வாங்குவதற்கும், கிராண்டுகளை கொடுக்க ஜில்லாக் கல்விச் சபைகள் எய்டட் பாடசாலை மானேஜர்களிட மிருந்து, மனுக்களை வாங்கலா மென்பதாக அரசாங்கத்தார் மேற்குறித்த புதிய உத்திரவை பிரப்பித் திருக்கின்றனர். இதை ஒவ்வொரு ஆசிரிய மானேஜர் சங்கக் காரியதரிசிகளும் தங்கள் சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு தெரிவிப்பார்களாக.

## கல்விச்சபை ஆசிரிய மானேஜர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அந்தந்த ஜில்லாக் கல்விச் சபைகளில் அங்கத்தினர்களாகவிருக்கும் நமது ஆசிரிய மானேஜர் சகோதரர்கள், தற்போது நவம்பரில் சென்னையில் கூடப்போகும் கல்விச் சபை அங்கத்தினர் மகா நாட்டிற்கு தவறுமல் விஜயம் செய்து நமது சமூகத்திற்கு ஏர்ப்பட்டிருக்கும், பல குறைபாடுகளை ஒருவருக்கொருவர் அலோசித்து பல தீர்மானங்களைச் செய்து (Elementary Education act) ஐ சீர்திருத்தம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

காரியதரிசி

மாகாண கல்விச்சபை அங்கத்தினர்கள் மகாநாடு,

ஆரம்பக்கல்வி ஆபீஸ் புதுத் தெரு. மண்ணடி மதரூஸ்.

## மிஷன் அல்லாத எய்டட் பாடசாலை

## மானேஜர்கள் சங்கம்

அம்பா சமுத்திரம் (23-9-34)

அம்பா சமுத்திரம் தாலுக்கா மிஷன் அல்லாத எய்டட் பாடசாலை மானேஜர்கள் சங்கம் திரு. S. மஹாலிங்கம் ஐயர் அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. ஆசிரிய மானேஜர்கள் சங்கத்தைப் போலவே தாங்களும் தங்களுக்கென தனிப்படையான, ஒரு சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்பதாக தீர்மானித்து, இச்சங்கத்திற்கு வேண்டிய சட்ட திட்டங்களை ஏற்படுத்த ஒரு கமிட்டியொன்று நியமிக்கப்பட்டது. திருவாளர்கள் K. V. அநந்தநாராயண ஐயர், B. A. B. L. இராமசுப்பிரமணிய ஐயர் B. A. B. L., K. பெருமாள் ராயர், ஆகிய இம்மூவரும் திருநெல்வேலி ஜில்லா ஆசிரியரல்லாத மானேஜர்கள் சங்கத்திற்கு அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

---

## இரட்டைத் தலையுள்ள குழந்தை

(11—9—33) மசூலிப்பட்டணத்திலுள்ள கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியில் ஒரு பெண்மணி இரண்டு தலைகளையுள்ள ஓர் ஆண் குழந்தையை பெற்றனள். உடல் மாத்திரம் ஒன்று. 4 கண்கள் 4 காதுகள். அக் குழந்தை பிறந்ததும் இறந்துவிட்டது. டாக்டர்கள் அதை திராவகத்தில் விட்டு எக்ஸிபிஷன்களுக்கு அனுப்புவார்களாம்.

# மனோ நிலைமை

## [மனம்போல் வாழ்வு]

காரிய மனதைப் பற்றியும் அது நமது சரீரத்திலுள்ள பல உறுப்புகளின்பேரில் எவ்வாறு ஆட்சி புரிகிறதென்பதைப் பற்றியும், நமது இச்சா சக்தி அல்லது விருப்பமானது எவ்வாறு அந்த மனதையும் வசப்படுத்திக் கூடியதென்பதைப் பற்றியும் கீழ்ப் பாடங்களில் சொல்லியிருக்கிறோம். இதை நன்றாயறிந்தவர்களுக்கு நமது மனோ நிலைமைகளுக்கு அநுகுணமாக நமது ஆரோக்யமும், மாறுகின்றதென்கிற உண்மையானது தெற்றென விளங்குமென்பதில் ஸந்தேஹமில்லை. ஞானம், ஆநந்தம், நிர்மலம், இவைகளை உண்டாக்கக் கூடிய எண்ணங்கள் நமது சரீரத்தில் இயற்கை வேலைகளைச் செய்ய நல்ல ஸாதனமாயிருக்கின்றன. அதைரியமும் இருளடைந்த கவலையும், பயமும், பகைமையும், பொறாமையும், கோபமும் உண்டாக்கக் கூடிய எண்ணங்கள் சரீரத்தில் இயற்கை ஒழுங்குகளைக் கெடுத்துக் கடைசியாய்ப் பிணியையும் கொண்டுவிடுகின்றன.

2. நல்ல ஸமாசாரங்களும் திருப்தியும் ஸந்தோஷமான வாழ்க்கையும் ஒருவனுக்கு நல்ல பசியை யுண்டாக்குகின்றனவென்றும் கெட்ட ஸமாசாரங்களும், விசாரத்துடன் கஷ்ட ஜீவனமும் இயற்கைப் பசியை அபஹரித்து அசௌக்யப்படுத்துகின்றனவென்றும், நாமெல்லோரும் அறிந்த விஷயம். நாம் மிகவும் இஷ்டத்துடன் சாப்பிட்டுவந்த பலஹாரத்தையாவது பக்ஷணத்தையாவது நினைக்கும்பொழுதே நமது வாயிலில் ருசித்து உமிழ்நீர் சுரக்கிற விஷயம் யாவருக்கும் அநுபவமாயிருக்கலாம். கேட்ட மாத்திரத்தில் நாக்கில் ஜலம் ஊறுகிறது என்று எத்தனையோ பேர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். இதே மாதிரியாக வேறு சிலவற்றின் ஞாபகமாவது அல்லது பார்வையாவது வாந்தியை உண்டாக்குவதையும் நாம் அநுபவித்திருக்கிறோம்.

3. நமது மனோ நிலைமைகள் சரீர வேலைகளுக்குப் புருஷகாரியான கார்யமனதில் ப்ரதிபலிப்பதால் அதே நிலைமை சரீரத்தில் க்ரியா சக்தியாக மாறி வேலை செய்வதை உடனே யறியலாம்.

4. அதைரியத்தையும் விசாரத்தையும் கொடுக்கக்கூடிய எண்ணங்கள் நமது சரீரத்தில் ரத்த ஓட்டத்தைத் தடுக்கிறது. அதனால் சரீர உறுப்புக்களுக்குத் தக்க போஷணத்தைக் கொடாமல் சரீர வேலைகளெல்லாவற்றையும் பாதிக்கிறது. சாந்தியற்ற எண்ணங்கள் பசியைக் கெடுத்து விடுவதால் சரீரமானது போதுமான போஷணத்தை யடையாமல் போகிறது. அதனால் ரத்தமும் சீத்து பதார்த்தமும் குறைந்து போகிறது. இப்படிக்கின்றி ஸந்தோஷத்தையும் க்ஷேமத்தையும் கொடுக்கின்ற எண்ணங்கள் நல்ல பசியை உண்டாக்கி ஜீரணத்தை அதிகப்படுத்தி ரத்தத்தை நன்றாய்ப் பாவும்படி சஹாயம் செய்கிறபடியால் சரீரவமைப்புகளுக்கு பலத்தைத் தருகின்றன.

5. மனோசக்தியானது சரீர வேலைகளை மேலே சொல்லியபடி மாற்றக் கூடியதென்கிற கோட்பாடுகளை மந்திரவாதமென்றும், இந்திரஜாலமென்றும் சூந்யக்காரர்கள் சொல்லுகிற வைத்தியக்கார யுக்திகளென்றும் அநேகர் நினைக்கிறார்கள். ஆனால் சாஸ்திரக்காரர்கள் பரிசோதித்து எழுதிவைத்திருக்கிற விஷய தத்துவ நூல்களை ஆராய்ச்சி செய்து பார்த்தால் இதன் உண்மை நன்றாய் வெளியாகும்; உறுதியான மனோ நிலைமைகளாலும் மனதிலுதிக்கும் நம்பிக்கையினாலும் சரீரம் வசப்பட்டு வேலை செய்கிறதென்கிற உண்மையை அநேக பரிசோதனைகளினால் பரீக்ஷித்து அநேக நிரூபணங்களால் ஊர்ஜிதப் படுத்தியிருக்கிறார்கள். தனக்கு நோயுண்டா யிருக்கிறதாக எண்ணி அதே சிந்தனையினால் நோய் கொண்டவர்களையும், தனக்கு நோய் நீங்கிவிட்டதாக நம்பி தைரியங்கொண்டு அதனாலே ஆரோக்ய மடைந்தவர்களையும், அப்படி ஒருவனுடைய அந்தரங்க சிநேகிதர்கள் அல்லது ஆப்த பந்துக்களுடைய வார்த்தையை நம்பி நோய் தெளிந்து குணப்பட்டவர்களையும், அயலாரிடமிருந்து மந்திரம், ஏவல் என்பவைகளை நம்பி மனதில் சாந்தியற்று வியாதி, கொண்டவர்களையும் நாம் பார்த்தும் கேட்டு மிருக்கிறோம்.

6. நல்ல கோபமா யிருக்கும்பொழுது வாயில் சுரக்கிற உமிழ் நீர் விஷத்தன்மை யுள்ளதா யிருக்கிறது. அதே மாதிரியாகத் தன் குழந்தைக்கு முலையூட்டும் காலத்தில் கோபமடைந்திருந்த



தாயின்பால் குழந்தைக்கு நஞ்சாகிறது. அதைரியம் அல்லது பயமடைந்த காலத்தில் வயிற்றில் உண்டாகிற உதிரத்ரவம் அல்லது ஜடராக்னி தாராளமாய்ப் பொசிப்பதில்லை. இவ்விதமாக மனோ நிலைமைகளினாலே சரீரத்தின் வேலைகள் மாறுகின்றன வென்பதற்கு அநேக உதாரணங்கள் கொடுக்கக்கூடும்.

7. அஸ்வபாவ நிலைமைகளினாலும் விரோத எண்ணங்களாலும் பிணியுண்டாகிற தென்பதை ஸந்தேஹிக்கும் பட்சத்தில் இவ்விஷய உண்மையைப்பற்றி மேனாட்டாருடைய நூல்களை முதலில் ஆராய்வோம்.

8. சர் ஸாம்யூல் பேகா ப்ரிட்டிஷ் அண்டு பாரின் மெடிகோ ஸர்ஜிகல் ரிவ்யூ என்னும் பத்திரிகையில் "அதிக கோபம் அல்லது விசனம் ஆப்பிரிக்கா கண்டத்தில் ஜுரம் உண்டாவதற்கு மூல காரணம்" என்று கூறி யிருக்கிறார்.

9. ஸர் டப்ளியு ரிச்சர்ட்ஸன் என்பவர் தமது டிஸ்கோர்ஸில் "மதுமேக ரோகம், மனதில் திடீரென்று உண்டாகும் அதிர்ச்சியால் நேரிட்டு தேஹத்தில் பாவும் பிணி" என்று எழுதியிருக்கிறார்.

10. ஸர் ஜார்ஜ் பேகட் என்பவர் தமது உபந்யாசங்களில் "நீடித்த மனக்கவலையால் கட்டிகள் உண்டாகின்றன வென்று நம்புவதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன" வென்று எழுதுகிறார்.

11. மர்ச்சிஸன் :—"பித்த உறுப்பு வீங்கி வயிற்றில் கட்டிகள் உண்டாவதற்கு அநேக கால விசனம் அல்லது கவலையே காரணம்" என்பதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் கொடுத்திருப்பதோடு இந்த விஷயத்தில் காரண காரிய சம்பந்தமானது தற்செயலாகவாவது அகஸ்மாத்தமாகவாவது இருக்க இடமில்லை யென்றும் குறிக்கிறார்.

12. டாக்டர் ஸ்நோ என்பவர் லான்செட் என்னும் பத்திரிகையில் சுவாஸப்பை, மூத்திரப்பை இவைகளில் உண்டாகும் கட்டிகளுக்கு மனக்கவலையே அநேகமாய்க் காரணமாயிருக்கிற தென்று எழுதியிருக்கிறார்.

13. டாக்டர் லிக்ச் :— காமாலை, மனக்கவலையினாலேயே உண்டாவதாக அநேக ஸந்தர்ப்பங்களில் காட்டுகிறார்.

14. டாக்டர் சர்டன் கவலையினால் உண்டான காமாலையைப் பற்றி எழுதியிருக்கிறார்.

15. டாக்டர் மெக்கன்சி என்பவர் ரத்தம் வெளுத்துப் போகும் பித்தபாண்டு ரோகம் மனம் திடுக்கிட்டபடியினால் உண்டானதாக அநேக உதாரணங்களால் விளக்குகிறார்.

16. டாக்டர் ஹண்டரும் பித்த சோகையைப் பற்றியே ஊர்ஜிதப்படுத்துகிறார்.

17. ரிச்சர்ட்ஸன் :—அதிகமான மனோ வேலைகளால் சொறி, சிரங்கு, இவைகள் உண்டாவதாகக் குறிக்கிறார். இந்தப் பிணிகளுக்கும் கட்டி, பைத்தியம், காக்கை வலி முதலிய இதர நோய்களுக்கும் மனோ நிலைமையே காரணமாகிற தென்றும் சரீர வியாதிகளில் மனத்திற்குள்ள ஆதிக்யத்தை அறியாதது ஆச்சரியப்படத் தக்கது என்றும் எழுதியிருக்கிறார்.

18. எல்மர்கேட்ஸ்:—முன்கோபம், கெட்ட எண்ணம் கவலை இவைகள் சரீரத்தில் நஞ்சுத் தன்மையாயும் அபாயகரமாயும் உள்ள வஸ்துக்களை உண்டாக்குகின்றன வென்றும் சௌகர்யமாயும் ஸந்தோஷ முண்டாக்குவதாயுமுள்ள எண்ணங்கள் சரீரத்தில் வீர்யத்தை உற்பத்தி செய்யும் சரீர காலங்களுக்குப் போஷணையைக் கொடுக்கக்கூடிய வஸ்துக்களை உற்பத்தி செய்கின்றன வென்றும் தெரிவிக்கிறார்.

19. டாக்டர் ஹாக் டியூக் :—மேனாட்டில் மனோ சக்தியால் நோய்களை சிகிச்சை செய்ய ஸாத்தியமாகுமென்று தெரிவிக்கிற நூல்கள் வெளியாவதற்கு வெகு காலத்திற்கு முந்தியே பைத்தியம் பேதமைத்தனம், பார்சுவவாதம், காமாலை, நரைமயிர், தலை வழுக்கை, பல்நாசம், மூத்திரப்பை நோய், அக்கினியம்மை, கரப்பான் இப்படிப்பட்ட பிணிகளுக்கு பயம் காரணமாவதாக அநேக உதாரணங்கள் கொடுத்திருக்கிறார்.

20. காலரா, ப்ளேக், வைசூரி முதலிய க்ரூரமான தொத்து வியாதிகள் பரவி உபத்ரவிக்கும் இடங்களில் கிலியினாலே அநேகர் அப்படிப்பட்ட நோய் கண்டு தேஹம் மலிவடைந்து மரணத்திற்கும் உள்ளானதாக உதாரணங்களோடு நிரூபிக்கப்பட் டிருக்கிறது.



ஸாதாரணமாக இப்படிப்பட்ட தொத்து வியாதிகள் வீர்யம் குறைந்திருப்பவர்களை எளிதில் தாக்குகின்றனவென்றும் பயமும் கிலியும் அப்படிப்பட்ட வீரியக் குறைவை உண்டாக்குகின்றவென்றும், சில கிராமத்தார்கள் அப்படிப்பட்ட வியாதிகளை வாயினால் சொன்னாலும் ஒட்டிக்கொள்ளுமென்று பயந்து பேர் சொல்லாது "கசப்பு" என்று அவைகளை ஸாதாரணமாய் சொல்லுவது வழக்கமென்றும் நம்மவர்களில் அநேகருக்கு அனுபவமாய் தெரிந்திருக்கலாம்.

21. இது விஷயத்தில் இன்னும் அதிகமாக டாக்டர்களின் அனுபவங்களை இங்கே எடுத்து எழுதுவதினால் பெருகுமென்று அஞ்சி இம்மட்டோடு நிறுத்துகிறோம். வேண்டியவர்கள் இவைகளைப் பற்றிய இதர நூல்களிலும் விஸ்தாரமாய்க் காணலாம். ஆனபோதிலும் மனமே எல்லாவிதமான செய்கைகளுக்கும் முதற் காரணம் என்கிற ஸித்தாந்தத்தை மனத்தில் நன்றாய்ப் பதிந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

22. நமது முன்னோர்கள் தேஹதத்துவம் அறியாமல் ஏதோ சில குருட்டு அனுபவங்களைக் கொண்டு சில நூல்களை எழுதி வைத்து விட்டிருக்கிறார்களென்றும், அது இக் காலத்திற்குப் பொருந்தாது என்றும் நினைத்து யோக நூல்களாகிற தர்ம சாஸ்திரங்களை அவமதித்து வருகிற இக்காலத்து நாகரீக சிரோமணிகளை உத்தேசித்து நமது முன்னோர்கள் எழுதிவைத்திருப்பவைகளிலுள்ள சில உண்மைகள் மேனாட்டார்களாலும் இப்பொழுது ஆராய்ச்சி செய்யப்பட்டு ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருப்பதைத் தெரிவிக்கவேண்டிய நிமித்தமாக இங்கே சில நிதர்சனங்களைக் காட்டினோம்.

நமது முன்னோர்கள் பாக்ரம பூதக் கண்ணாடியாலும் சூக்ஷ்ம தேகம், ப்ராணன் கார்யமனம், காரணமனம், ஸமாதிமனம், ஆன்மா, பரமாத்மா முதலியவைகளின் இலக்கணங்களை அறிந்தவர்கள் என்பதையும் அந்த தர்ம சாஸ்திரங்கள் அப்படிப்பட்ட மஹான்களான மஹரிஷிகளால் எழுதப்பட்டவைகள் என்பதையும் நவீன நாகரீகத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறவர்களுக்கு மறுபடி ஞாபகம் மூட்டுகிறோம்.

23. கார்யமனம், காரணமனம், ஸமாதிமனம், இவைகளின் தத்துவம் அல்லது சுவரூபம் இவ்விடத்திற்கு அவசியமில்லை யாதலால் அவைகளைப் பற்றி இங்கே விவரிக்கவில்லை. அவைகளைப்பற்றி இனி அச்சிட்டு வெளியிட உத்தேசித்திருக்கும் இராஜ யோகத்தின் கீழ்க்காணலாம்.

24. யோக சாஸ்திரம் படிப்பவர்களுக்கு பயமின்மை, சாந்தி பலம், ஆரோக்யம் இவைகளோடு மனச்சாந்தியை உண்டாக்கி அவைகளை சரீர வாழ்க்கையில் ப்ரதிபலிக்கும்படி போதிக்கிறது. யோகிகளுக்கு அவய ப்ரயத்ன மில்லாமலே இயற்கையாகவே பயமின்மையும் சாந்தியும் உண்டாகின்றன. அதை அடையாதவர்களுக்கு அதை அடையும்பொருட்டு அந்தக் கருத்தைக் கொடுக்கின்ற அடியில் கண்ட வாக்யத்தை உச்சரிப்பது நல்லது.

"ஞானம்" "ஆனந்தம்" "நிர்மலம்" என்கிற இவ்வாக்யத்தின் கருத்துகளை அடிக்கடி உச்சரித்துவாக் கேட்டுக் கொள்ளுகிறோம். இந்த தியானத்தால் சாந்தியும் பயமின்மையும் உண்டாகி சரீரம் பலப்படுவதை அனுபவத்தில் அறியலாம். மனதில் ஏதாவது சஞ்சலமும் துக்கமும் விசாரமும் உண்டானால் "ராமநாதத்தை யாவது" குமாரவேள் வீரத்தையாவது அடிக்கடி உச்சரித்து நம்மவரில் அநேகர் சாந்தி அடைந்ததையும் பார்த்திருக்கிறோம்.

அச்சுதா நந்தகோ விந்தனென்னும் நாமத்தை
இச்சையாய்ப் பேசும் இயல்புடையார் — நிச்சயமாய்
நோய்ரணம் நீர் நுவலும் அக்கினியாம் அச்சமெலாம்
மாய்ந்தர வாழ்வார் மகிழ்ந்து.

---

# உதய குமாரன்

## வஞ்சித்தாரை தெய்வம் தண்டிக்கும்

### ஓர் இனிய தமிழ் நாடகம்

(முன் தொடர்ச்சி)

பதுமுகன் : அடே மூடா நான் காய் என்றால் நாலு என்று அர்த்தமடா.

வீரன் : போ! போ! மொடா நாங்கள் இன்னைத்துக்கு மொடா கள்ளுகுடித்தா ஜோக்குதா.

பதுமுகன் : கொடுக்கின்றேன் சீக்கிரம் சொல்.

வீரன் : உங்கப்பானே குடுக்கிரிங்களா.

பதுமுகன் : ஆகட்டும்.

வீரன் : ஆனா, சரி, சொல்ரேன். உங்க ஐயாவே இட்டுக்குனு சுடுகாட்டு அம்மா கோவுளுக்கு போனே. போனதும் உங்க மாமா மச்சா அவரே வெட்டோ கத்தி புடிங்கினாரு. அப்போ திடீலின்னு அந்த கோவுளுள்ளே ஒரு சத்தம் கேட்டுது. நாங்கலா அவரே உட்டுட்டு ஓடிப்பூட்டோ.

பதுமுகன் - எவளர்.

வீரன் : அவரே. அவரே இண்ணு அவரக்கா செடி யில்லாசாமி உங்க அய்யாவே.

பதுமுகன் : மற்றபடி என்ன நடந்தது.

ரன் : கள்ளுதுடுசாமி.

வீதுமுகன் : அப்பால் கொடுத்து விடுகின்றேன்.

வீரன் : ஐயய்யோ! சர்தான் சர்தான் அம்மா கோத்து உப்போரிங்கோ. ஆனா நானு இதோ ஓடிப்போரே. (என்று ஓடப் பார்த்தல்)

பதுமுகன் : பிடித்து இழுத்தல்.

வீரன் : இல்லே சாமி! இல்லே சாமி! நானு ஓடிப்போரேன்.

190337

பதுமுகன் : அடே வீரா பயப்படாதே. அப்பால் கொடுத்து விடுகிறேனென்றால் கள்ளை அப்பாலே குடுக்கிரேன் என்று அர்த்தம்.

வீரன் : நீங்கோ பேச்சுரது தம்ளா தெலுங்கா. அது சரி சாமி எப்போ குடுக்ரிங்கோ. இப்போ இப்போ போடுடேஞ் சாமி.

பது●கன் : அப்பால் கொடுக்கின்றேன் நீ சொல்.

வீரன் : பால் வாறு கள்ளுதா ஒணு.

பதுமுகன் : சரி சொல்.

வீரன் : எங்கெ உட்டேஞ் சாமி.

பதுமுகன் : கோவிலில் சந்தடி கேட்டது.

வீரன் : அதாஞ் சாமி அதா. அப்பாலே நானு பயிந்துப் போயி அங்கியே உயுந்து கடந்தே. பீபனு ராஜா மச்சானு டிச்சாங்கோ கம்பி.

பதுமுகன் : மறுபடியும் நீங்கள் அவ்விடம் போகவில்லையா?

வீரன் : போனு செத்தோ. அந்த இடியே நெனச்சிக்கினு பயம்மா இருக்குதே. எங்கே சாமி அவரு.

பதுமுகன் : அவர் இவ்விடம் வரவில்லை எங்கு சென்றனரோ தெரியாது.

வீரன் : எனக்கு கள்ளோ குடுத்துடுங்கோ. எப்படியாவது போவுது.

பதுமுகன் : வீரா இதோ பெரிய பணம். இதைப் பெற்றுச் செல்லுவாய்.

வீரன் : ரொம்போ புண்ணிஞ்சாமி உங்களுக்கு. உங்க பேரே சொல்லி நல்லா ரெண்டுபடி கள்ளு குடிப்பே. (போய்விடுதல்)

பதுமுகன் : நாம் செய்த புண்ணியமே புண்ணியம், நம் உயிரினுஞ் சிறந்த சீவோதயன் இன்னும் உயிருடன் இருக்கின்றான் என்று கேட்டதே போதும். இனி நம் நண்பனை அடைவதற்கான பிரயத்தனம் புரிவம்.

சயிந்தை : ஆ என் நாதா! நீர் என்னுடனில்லாவிடினும் உயிருடன் இருக்கின்றீர் என்ற சொல்லொன்றே போதும். இப்பொழுதன்றோ என் வாழ்வு பயன்பெற்றது. ஆ நாதா. என்னைப் பிரிந்து எப்படி எவ்விடமிருக்கின்றீர். என் நினைவனைத்தும் நும்மையே நாடுகின்றதே. ஆ தெய்வமே!



"சோனையுங்காத்து நல்லானையுங்காத்துத் துரோபதைதன்
தானையுங்காத் தடைந்தானையுங் காத்துத் தடத்தகலி
* மானையுங்காத் தனுமானையுங் காத்து மடுவில் விழும்
ஆனையுங்காத் தவனே யெனைக்காப்ப தரிதல்லவே."

* தனிப்பாடற்றிரட்டு - அந்தகக் கவி வீரராகவ முதலியார்.

மேகலை : அடி என் கண்மணி; நினக்கு ஏது குறையும் இனி உனக்கு நிகழாது. நீ சீக்கிரமே நின் நாதனை அடைவாய். இனி நாம் நடத்தவேண்டியவைகளை நடத்துவம். நாம் இப்பொழுதே வீரகேசரி வர்மனிடம் சென்று நிகழ்ந்தவற்றையுரைத்து துஷ்டத் தம்பனை ஒழித்து நம் கண்மணியையடைந்து இன்புறுதல் வேண்டும். யாவரும் புறப்படுங்கள் போவோம் (யாவரும் போய்விடுதல்.)

## Scene iii

வீரகேசரி வர்மன் அந்தப்புரம்.

சாயாதேவி : நாதா! நம் புத்திரி சயிந்தை எப்படியிருக்கின்றனளோ. அவள் செய்தி இதுகாறும் ஏதும் அறியாதிருக்கின்றோம். நம் தூதுவருள் ஒருவரை விடுத்துச் செய்தியறிந்து வருமாறு கட்டளையிடுதல் வேண்டும்.

கேசரி : பெண்ணே! அப்படியே செய்வோம். எனக்கும் அதைப்பற்றிக் கவனந்தான். இராச சபைக்குச் செல்லும் இவ்வளிக காரியங்கள் முற்றும் கவனத்திற்கு வருவதில்லை. மறுபடியும் இவ்விடம் திரும்பிவரும்போதே கவனம் வருகின்றது ஆனதால் இக்கணமே ஓர் தூதுவனைப் போக்கி செய்தி வினவிவரும்படி யனுப்புவம். சேவகா! அங்கே யாரடா.

சேவகன் : ஆசர் சுவாமி.

கேசரி : நீ சென்று நீலனை நான் அழைத்து வரும்படிச் சொன்னதாகச் சொல்லி உடனே எவ்வித வேலை இருந்தபோதிலும் அதை விட்டு விட்டு இவ்விடம் வரச்சொல்.

சேவகன் : கட்டளைப் படிக்கே. (போதல்)

தூயா : நாதா நம் குமாரத்தியைப் பற்றி எனக்கு ஏது கவலையும் இல்லாதிருந்தபோதிலும், அந்தப் பாதகன் துஷ்டத் தும்மன் நாட்டில் அவள் வாழ்ந்து வருவதாலும், நம்மகளைக் கவரும் பொருட்டு இவ்விடம் ஓர் கலகம் விளைந்தாலும் அவனால் நம் மகளுக்கும் மருமகற்கும் ஏதாயினும் தீங்கு நேரிடுமோவென்ற கவலைதான்.

கேசரி : அடி பேதாய்! நீ அப்படி கனவிலும் கருத வேண்டா? நம் மருமகன் சமான்யனல்லன், அவனைச் செட்டி மகனென்றெண்ணாதே அவன் ஏதோ தவக்குறைவால் செட்டிப் பிள்ளையாய் பிறந்துவிட்டான். ஆனாலும் அவன் மகா வீரன். அவனை முக்கண் படைத்த முதல்வனோடு பொருந்த வில்லியாகிய அர்ச்சுனனுக்கே ஒப்பானவன். அவன் துஷ்டத் தும்மனைப் போன்ற மன்னர் பதின்மரையும் ஒரு நொடிப்போதில் போர் முகத்தில் மடிய வாட்டுவன். அவன் வீராதி வீரன். வீரமார்த்தாண்டன்.

சேவகன் : அரசே! நும் திருமகளும் இன்னும் மூவர்களும் இவ்விடம் வரவேண்டி இருக்கின்றார்கள்.

சாயா : (எழுந்து வருதல்) அடி என் கண்மணி உன் மேனி வாடி நடந்து வந்த வயணமென்ன. நின் நாயகனெங்கே. நினக்கென்ன தீங்குற்றது.

கேசரி : அடி என் செல்வப்பெருக்கே! நினக்கு என்னை உற்றது. நின் நாதனெங்கே?

சயிந்தை : அப்பா எனக்கு ஏது குறைவும் கிடையாது. என் நாதரும் சுகமே. நும்மையும் அன்னையாளரையும் பார்த்துப் போகும்பொருட்டே வந்தேன்.

கேசரி : கண்மணி! மிகவும் சந்தோஷம். சந்நியாசி வேடம் பூண்டிருப்பவர் யார்? அவ்வம்மையைப் பார்த்தால் என் தங்கை விசயா தேவியைப்போல் தோற்றுகின்றது.

# ஜில்லாக் கல்விச் சபைகள்

## ஜில்லாக் கல்விச் சபை மேற்கு கோதாவரி

30—9—34

### சேம்பியன் ஸ்கீம் எதிர்க்கப்பட்டது

திரு. டி. வெங்கட ராவ் அவர்களின் தலைமையில் கூடியது. தற்போதுள்ள கிராமந்திர நிலைமைகளைப் பார்க்கும்பொழுது இந்த சேம்பியன் ஸ்கீம் நடவடிக்கையில் முடியாத காரியமென்பதாக ஏகமனதுடன் ஓர் தீர்மானம் நிறைவேற்றியது. ஆண் பெண் பிள்ளைகளை கலந்து கல்வி கற்பிக்கும் முறையை அடியோடு ஒப்புக் கொள்ளவில்லை. முனிசிபாலிடியார் எய்டட் பாடசாலை மானேஜர்களின் சம்மதத்தின் பேரில் கூடுமானால் பாடசாலைகள் இணைக்க பிரயத்தினக்கலாமென்பதாகவும் தீர்மானித்தது.

## மலையாள ஜில்லாக் கல்விச் சபை

30—9—34

திரு. ஜே. எப். தட்டேயஸ் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. திரு பரயார் ஆரம்பப் பாடசாலைக்கு கல்வி யதிகாரியவர்கள் 5-வது வகுப்பிற்கு மேல், 6, 7-வது வகுப்புக்களை வைக்க அங்கீகாரம் அப் பாடசாலைக்குக் கொடாமல் தடுத்து எழுதியிருந்தார். திரு அச்சுதன் அவர்கள் அப் பாடசாலைக்கு அவசியமேல் வகுப்புக்களை வைக்க கல்விச்சபை கொடுக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறியது.

---

சயிந்தை : அந்த வம்மையார் தங்கள் தமக்கையும் என் மாமியுமே.

கேசரிவர்மன் : அதெப்படி அம்மா! தங்கள் விருத்தாந்தம் என்ன?

விசயதேவி : அண்ணா! என் நாயகர் சண்டாளன் துஷ்டன் என்னால் கொலையுண்டு இறந்த பின் இருபது ஆண்டுகளாய் என்னைப் பற்றி யாவது நின்மைத்துனரைப் பற்றியாவது நினைத்திருப்பாயா. அல்லது நின்மைத் துனரை வஞ்சகத்தால் கொன்ற பாதகனை தண்டிக்கவாவது ஏதாவது பிரயத்தனம் செய்திருப்பாயா?

## ஆசிரியர்கள் பொது ஸ்தாபனங்களுக்கும், சட்ட சபைகளுக்கும் செல்லலாம்.

### அலஹாபாத் யூனிவர்ஸிடியின்- தீர்மானம்

சில ஆண்டுகளுக்கு முன்பு சர்வ கலாசாலை ஆசிரியர்கள் பொது ஸ்தாபனங்களுக்கும், அங்கத்தினர்களாக தேர்தலில் நிற்கக் கூடாதென்பதான ஓர் உத்திரவு யூனிவர்ஸிடி அதிகாரிகள் ஏற்படுத்தியிருந்தனர். அதை இப்பொழுது ரத்து செய்து அவ்விதம் அங்கத்தினர்களாக நிற்பவர்கள், தங்கள் வேலைகளில் எத்தகைய குறைவும் இல்லாமல் தகுந்த ஏற்பாடு செய்வார்களானல் யூனிவர்ஸிடி அதிகாரிகளின் உத்திரவின்பேரில் பொது ஸ்தாபனங்களுக்கு நிற்கலாமென்பதாக தீர்மானித்திருக்கின்றனர்.

---

## தலைமை உபாத்தியாயர் யார்?

(ராமனுதன் செங்கல்பட்டு)

பாடசாலை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விஷயங்களுக்கும் ஜவாப்தாரியாக இருக்கவேண்டும். பாடசாலையில் நடக்கவேண்டிய ஒவ்வொரு வேலையும் சரிவர நடக்கும்படியான தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

தான் செய்யும் ஒவ்வொரு ஏற்பாடும், சட்டதிட்டங்களும் தனது சகோதர உபாத்தியாயர்களையும், பிள்ளைகளையும் அனுசரித்ததாக இருக்க வேண்டும். அவ்விதம் கொண்டுவரும் சீர்திருத்தங்களையோ, சட்ட திட்டங்களையோ அமுலுக்கு கொண்டுவருமுன் அவைகளை தனது சகோதர உபாத்தியாயர்களுடன் கலந்து, ஆலோசிக்க வேண்டும். தலைமை உபாத்தியாயர் செய்ய வேண்டிய வேலை இன்னதென குறிப்பிட முடியாது. ஒரு பாடசாலையின் முன்னேற்றிற்கு அவரே மூலகாரணம் ஆயினும் சில முக்கிய அலுவல்களை இங்கு குறிக்கின்றோம்.

பாடசாலையிலுள்ள பிள்ளைகளை வகுப்புவாரி பிரித்தல், அவர்களுக்கு பாடங்களை நிர்மானித்தல்.

ஒவ்வொரு வகுப்பு இருக்கவேண்டிய இடத்தைக் குறித்தல்.



ஒவ்வொரு வகுப்பிற்கும், (Time Table) கால அட்டவணைகளை ஏற்படுத்தல்.

பிள்ளைகள் பாடசாலைக்கு பரிசுத்தமாக உடுத்து வரவும், ஒழுங்காக பாடசாலைக்கு வரவும், அக்கரையாக வாசிக்கும்படியாகவும் செய்ய வேண்டும்.

சகோதர உபாத்தியாயர்கள் பிள்ளைகளின் அயோக்கியத்தனங்களை நன்ருக கண்டுபிடித்து அவர்களை சீர்திருத்தும்படியாக அவர்களை மேல் பார்வை பார்த்து வரவேண்டும்.

பாடசாலை வகுப்புக்கள் சரிவர நடைபெருவதற்கு பரீட்சாதிகாரிகளைப்போல் தலைமை உபாத்தியாயர் அவ்வப்போது ஒவ்வொரு வகுப்பிற்கும் சென்று உபாத்தியாயர்களையும், பிள்ளைகளையும் பரிட்சித்து வரவேண்டும.

உபாத்தியாயர்கள் கையெழுத்து புத்தகத்தையும் (Attendanc register) பிள்ளைகளின் ஆஜர் புத்தகத்தையும் அவ்வப்பொழுது சரிவர இருக்கின்றனவா வென பரிசிலனை செய்து வரவேண்டும்.

பிரதம உபாத்தியாயருக்கு நன்ருக போதிக்கும் சக்தி வாய்ந்தவராக இருக்கவேண்டும். தான் அப் பாடசாலையிலுள்ள உயர்ந்த வகுப்பில் அதிகப்படியான பாடங்களைஎடுத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு, வகுப்பிலும் சில முக்கிய பாடங்களை தலைமை உபாத்தியாயர் அடிக்கடி எடுத்துக்கொண்டு நன்ருக போதிக்க வேண்டும். சுருங்கக் கூறுமிடத்து, தலைமை உபாத்தியாயர் எல்லா வகுப்பிற்கும் உபாத்தியாயராக இருப்பதுபோல் பிள்ளைகளுக்கும் இதர உபாத்தியாயர்களுக்கும் காணப்படவேண்டும். பிள்ளைகள் துஷ்டத்தனம் செய்யின் அவர்களை தண்டிக்க வேண்டியது தலைமை உபாத்தியாயர். சரிவர பிள்ளைகள் பாடசாலைக்கு வருவிடின் தாய் தந்தையர்களுக்கு கடிதம் எழுதி அப்பிள்ளைகளை ஒழுங்குடன் பாடசாலைக்கு வரச்செய்வது தலைமை உபாத்தியாயருடைய கடமை.

ஆகலின் தலைமை உபாத்தியாயர் தம்முடைய போதிக்கும் காலத்தை குறைத்துக்கொள்ளவேண்டும். தலைமை உபாத்தியாயர் நன்ருக வாசித்தவருயும், தைர்யமாக பேசும் திறமை வாய்ந்தவரா

யும் சாந்தகுணமுடையவராயும், எல்லோரிடத்திலும் சகோதா பாவனையுடையவராயும், மரியாதை யுள்ளவராயும் அவசியம் இருத்தல் வேண்டும்.

## அட்வான்ஸ் கிராண்டு

### 1934 – 1935

20—9—34-ல் நடந்த சென்னை ஜில்லா கல்விச் சபைக் கூட்டத்தில் எல்லா எய்டட் பாடசாலைகளுக்கும் 1934–35 வருடத்து அட்வான்ஸ் கிராண்டு கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கவர்ன்மெண்டார் ரூபா 60000 செப்டம்பர் 30-ந் தேதியே ஜில்லாக் கல்விச் சபைக்கு அனுப்பிவிட்டனர். அநேக பாடசாலை மானேஜர்கள் இவ்வருடம் அக்டோபர் மாதத்திலேயே அட்வான்ஸ் கிராண்ட் கிடைத்ததைப்பற்றி அதிக மகிழ்ச்சியடைந்தனர். ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள எய்டட் பாடசாலை மானேஜர்கள், இவ்விதம் அட்வான்ஸ் கிராண்டை வாங்கும்படியாக ஒவ்வொரு ஆசிரிய மானேஜர்கள் சங்கங்களும் தீர்மானங்கள் செய்து கல்விச் சபை தலைவருக்கு அனுப்பினால், அவர் சீக்கிரம் கவர்ன்மெண்டிற்கு எழுதி பாடசாலைகளுக்கு அட்வான்ஸ் கிராண்டு சீக்கிரம் கிடைக்கும்படிச் செய்வார். சில ஜில்லாக்களில் அட்வான்ஸ் கிராண்டுகள் பாடசாலைக்கு கிடைப்பதில்லை யென தெரிகிறது. அதற்குக் காரணம் எய்டட் பாடசாலை மானேஜர்கள் ஊக்கமின்மையே.

# ஆரம்ப ஆசிரியர்களும் சம்பள திட்டமும்

(M. A. சந்திரபிரகாசம்.)

கவர்ன்மெண்டார் தாலூகா போர்டுகளை எடுத்து அதன் ஆதிக்கத்தை ஜில்லா போர்டில் ஒப்புவித்து ஆசிரியர்களின் சம்பளத்தை மாகாணம் முழுவதும் ஒரே விதமாக நிர்ணயிக்கும்படி ஓர் சுற்றுத்தரவை அனுப்பியுள்ளார்களென்று பத்திரிகை வாயிலாய் தெரிய வருகிறது. அவை வருமாறு:—

| கிரேடு | போதனுமுறை பயின்றவர் | | பயிலாதவர் | |
|---|---|---|---|---|
| | உபாத்தியாயர் | உபாத்தியாயினி | உபாத். | உபாத். |
| லோயர் | 15—$\frac{1}{2}$ = 20 | 20—$\frac{1}{2}$ = 25 | — | 15 |
| ஹையர் | 20—$\frac{1}{2}$ = 24, 2-2 = 30 | 25—$\frac{1}{2}$ = 29, 2-2 = 35 | 15 | 20 |
| செகண்டரி | 25—2-2 = 45 | 30—2-2 = 50 | 20 | 25 |

N .E 2-2 இரண்டு வருஷத்திற்கொரு முறை. இது எம்மட்டும் நியாயமான தென்பதைப்பற்றி ஆராய்வோம்.

நமது கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பல துறைப்பட்ட இலாகாக்களில் சம்பளங்கள் உத்தியோகத்தை அனுசரித்தவைகளா யிருக்கின்றன. பெரும்பாலும் குமாஸ்தாக்கள் கிரேடு, நடுத்தர உத்தியோகஸ்தர் கிரேடு, உயர்தர உத்தியோகஸ்தர் கிரேடு என்பவைகளே. உதாரணமாக நமது கல்வியின் மேற்பார்வை இலாகாவையே எடுத்துக் கொள்வோம். பியூன், அட்டெண்டர், குமாஸ்தா, ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர், ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர், ஜில்லா கல்வி ஆபீஸர், போலீஸ் இலாகாவை எடுத்துக்கொண்டால் கான்ஸ்டேபிள், சப் இன்ஸ்பெக்டர், சர்க்கிள், சூபரிண்டெண்டெண்டு; தபால் இலாகாவைப் பாருங்கள். ரன்னர், போஸ்ட்மான், கிளார்க், இன்ஸ்பெக்டர் சூபரிண்டெண்டெண்டு, ரெவின்யூ இலாகாவோ பியூன், கிளார்க், சிரஸ்தார், மாஜிஸ்திரேட்டு, தாசில்தார், டிப்டி கலெக்டர், கலெக்டர் முதலியன உத்தியோகப் பெயரே கிரேடாகவும், அந்த தாரணைப்படியே சம்பளங்களும், பிரமோஷன்களும் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களுக்கோ லோயர், ஹையர், செகண்டரி என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

இதிலும் அனேக உயர்தர எலிமெண்டரி பாடசாலைகளும் B. A. L. T. கள் ஆசிரியர்களாய்த் திகழ்கின்றனர். இவர்களுக்குச் சம்பள விகிதம் ஷை சுற்றுத்தாவில் காணப்படுவதாகத் தெரிய வில்லை. எனவே இவர்களை வேலையினின்றும் நீக்கி விடப்படுமோ என் சந்தேகிக்க இட மிருக்கிறது. தவிர எலிமெண்டரி பாட சாலைகளுக்கு மூவகைத்தான ஆசிரியர்களே போதுமான தென வும், கலாசாலைப் பட்டதாரிகள் வேண்டுவதில்லை யெனவும் திட்ட மாக விளங்குகிறது. ஓர் வகையில் இது சரியான முறையாக இருக்கலாம்.

ஆரம்பக்கல்வியானது மனிதவர்க்கம் பூராவாகப் பரவ வேண்டுமென்பது தேச மக்களுடையவும், அரசாங்கத்தாருடைய வும் அபிப்பிராயமாகும். எனவே இதைக் கட்டாயமாகவும் இலவ சமாகவும் செய்யவேண்டுமென்று நெடுநாளாக முயர்ச்சித்தும் பொருளாதார முடை தடைப்படுத்தி வருகின்றது. இந்நிலையில் கலாசாலை பட்டதாரிகள் ஆரம்பப் பாடசாலைக்கு அவசியமின்றும்.

சரி இனி செகண்டரி தவிர்த்த ஹையர், லோயர் கிரேடு ஆசிரியர்கள் செய்வது என்னே? முதல் ஐந்து வகுப்புக்கள் நடத்துவதே யாகும். இதில் மிகக்குறைந்த போதனு சக்தி வாய்ந்த ஹையர் கிரேடு ஆசிரியர்களும் திறமை வாய்ந்த லோயர் கிரேடு ஆசிரியர்களும் உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது. எனவே இவர்கள் நிர்வஹிக்கும் ஆரம்பப் பாடசாலைகளில் நடக் கும் பாடங்களுக்குப் பாட அட்டவணை யிருக்கிறது; அதிலுள்ள படியே நடத்தப்படுகின்றன. ஆகவே ஹையர் கிரேடு ஆசிரியர் நடத்தும் பாடசாலை விருத்தி அதிக மென்றுவது லோயர் கிரோடு ஆசிரியர் பாடசாலை விருத்தி குறை வென்றுவது நிரூபிக்கப் படவில்லை.

ஆனுல் சில வருஷங்களாக இந்த லோயர், ஹையர் என்ற பேதாபேதம் ஏற்பட்டு சம்பளத்திலும் திரவிய சகாயத்திலும் வித்தியாசங் காட்டியது முழுவதும் நியாய விரோதமான தென் பது அறிஞர்கள் ஒப்புக்கொள்ள மேற்கூறியவை சான்றுகும்.

1905-ம் வருஷத்தில் ஏற்பட்ட ஆசிரியர்களின் சம்பள திட்டம் கிரேடு என்ற பெயரே இன்றி ரூ. 8, 10, 12, 15, 20. ஆக இருந்து வந்தது, பின் நாளடைவில் இவை முற்றும் மறையத்



தொடங்கிப் பலதிறப்பட்ட திட்டங்கள் அந்தந்த தாலூகா போர்டுகளின் நிலைக்குத் தக்கவாறு ஏற்பட்டன. ஆனுல் திரவிய சகாய பாடசாலைகளின் சகாயத் தொகைகள் கிரேடு வாரியான வித்தியாசம் காட்டப்பட்டன. இந்தக் காலத்தில் ஆரம்ப ஆசிரியர் களும், ஆசிரிய மானேஜர்களும், மிஷினரி மானேஜர்களுங் கூட கவலை யற்றிருந்தனர்; இன்னு மிருந்து வருகின்றனர்.

சாதாரணமாக திரவிய சகாய பாடசாலையை நிர்வகிப்ப தென்றுல் இக்காலத்தில் சாமானியமானதல்ல. பெற்றோர்களால் பைசா அளவில் பிரதிபலன் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அடுத்தடுத்து போர்டு பள்ளிக்கூடங்கள் நிறைந்திருக்கின்றன. அவைகளிற் இலவசக்கல்வி புகட்டப்படுகிறது. திரவிய சகாய பாடசாலையின் நிர்வாகத்திற்குச் சர்க்கார் கொடுத்துதவும் சகாயத் தொகை மிகக் குறைவான தென்றே சொல்லவேண்டும். ஸ்தல ஸ்தாபன பாடசாலைகளில் பெறும் ஆசிரியர்களின் சம்பளத்தில் முக்கால் பாகமாவது திரவிய சகாயமாகக் கொடுக்கப்பட்டாலன்றி கட்டக்கூடிய தல்ல வென்பதை அழுத்தமாகக் கூறலாம்.

இவ்வளவிற்கும் காரணமென்ன? 'அரசர்க்குச் செவியே கண்' என்பது நமது பண்டைமொழி. இந்த விவரங்களை காருண்ய கவர்ன்மெண்டாருக்கு எடுத்துக் காட்டாமையே முதற்காரண மாகும். இரண்டாவதாக யார் சொல்லுவது? இதற்குத்தான் ஆள் இல்லை. நாம் ஆரம்ப ஆசிரியர், ஏணி, தோணி, கிச்சிலிப் பழத்தைச் சேர்ந்தவர்கள். நம்மிடம் படித்து மேல்வகுப்புக்குப் போன மேல்பதவியிலிருக்கிற அறிஞர்கள், 'காக்கை வளர்த்த குயில் குஞ்சுகள்' பின் வளர்ப்புத் தாயைப் கருதுமோ? ஆனுல் எல்லோரையுமே அப்படி எண்ணக்கூடாது. நன்றி மறவாத நற் சிலரும், வேருக்குத் தண்ணீர் வார்க்கும் வேளாளர் போல்பவரும் இருக்கின்றனர். அவர்கள் யாது செய்வர்? நாம் நினைப்பூட்டினு லன்றே! குழந்தை அழாதவரை பால் கொடாத தாய்மாரில்லையா? அதைப்போல் நமது குறை, இலாகாக்களின் ஏற்றத்தாழ்வு, ஆரம் பக்கல்வியின் நிலைமை முதலியதைக் கூற வேண்டும்.

ஆரம்பக்கல்வியின் 5-வகுப்பு வரை ஏற்பட்ட பாடதிட்டங் கள் லோயர், ஹையர் இருபாலரும் நடத்தக்கூடியன, நடத்தி

வருகின்றனவே யன்றி அதிக மின்றும். இதற்காக பாடதிட்டத்தை அதிகப் படுத்தலா மென்றாலோ பிள்ளைகளின் வயதை நோக்கவேண்டும். அப்படியே உயர்த்தினுங்கூட இருவகைப்பட்ட கிரேடும், ஒருவகையாகவே முன்னேறு மென்பது சித்தாந்தம்.

இப்பொழுது திரவிய சகாயப் பாடசாலைகளும் ஸ்தல ஸ்தாபன பாடசாலைகளும் இருக்கும் நிலையில் இன்னும் புதிய திட்டப்படியான சம்பள தாரணையும் ஏற்பட்டுவிட்டால் விருத்தியாம்சம் மிக மிகச் சீர்கேடாகுமே தவிர முன்னேற்றமடையா தென்பது திண்ணம்.

இக்குறைகளைக் கவர்ன்மெண்டுக்கு எடுத்துரைக்க ஆரம்ப ஆசிரியர்களின் பிரதிநிதிகள் ஸ்தலஸ்தாபனங்களிலும், சட்டசபைகளிலும் இல்லாமை ஓர் பெருங்குறையா யிருப்பினும் ஆசிரியர்கள் மகாநாடு கூட்டுவித்து அதைச் சட்டமெம்பர்களின் தலைமையில் நடத்தி அவர்கள் மூலம் சட்டசபையிலும் டைரெக்டர் துரையவர்களுக்கும் எடுத்துக்கூறி மன்றாடினால் நலம் பெறாது போகாது

எனவே, ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களின் சம்பளம் கிரேடு என்ற தோரணையிலன்றி ஆரம்பம், உயர்வு, முடிவு என்றே ஏற்படுத்தல் பொருத்தமானதாகும்.

இந்த முறைக்கொண்டு நடத்தில் உபாத்தியாயர்கள் உயர்வை உத்தேசித்துப் போட்டி போட்டுக்கொண்டு பாடசாலைகளை விருத்தி செய்வார். கிரேடு என்ற பெயர் உள்ளவரை அரசாங்கத்தின் செலவு திட்டமும் ஆரம்ப பாடசாலைகளின் எண்ணிக்கையுமே நிலவுமன்றி தேசத்தில் கல்வி பரவுதலும் அதற்காக கவர்ன்மெண்டார் செலவிடும் கருத்தும் குதிரைக் கொம்பாகவே முடியும்.

ஆசிரியர்களிடையே இந்த கிரேடு என்னும் பேய் தலை விரித் தாடுவதால் இவர்கள் மாகநாடு கூட்டவோ முயற்சிக்கவோ முன் வருவாரென்று நம்புவதற்கும் மார்க்கமில்லை.

தேச நன்மையைக் கருதிய கனம் சட்ட அங்கத்தவர்களும் கல்வி இலாகா அதிகாரிகளும் மாட்சிமை தங்கிய அரசாங்கத்தவருக்கு இதம்பட தெள்ளிதில் எடுத்துரைத்து இனிது செய்ய எல்லாம் வல்ல பரம்பொருள் கருணை புரிவாராக.

(ஆனந்த போதினி)

# ஆரம்பக் கல்விச் சட்டத் திருத்த மசோதா

தற்போது கட்டாய இலவசப் படிப்பை அமுலுக்குக் கொண்டு வரவும், அதற்காக வரிவிதித்து சிலவு செய்யவும், ஜில்லா போர்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கட்டாய இலவசப் படிப்பு நமது இராஜதானியில் பரவாமலிருப்பதற்கு முக்கிய காரணம் என்று அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள பண முடை, இரண்டாவது லோகல் போர்டார் கட்டாய இலவச படிப்பை அமுலுக்கு கொண்டுவராமை. இந்தக் காரணங்களை முக்கிய ஆதாரமாகக் கொண்டு கனம் கல்வி மந்திரியவர்கள் ஆரம்பக் கல்விச் சட்டத்தைத் திருத்த ஒரு மசோதா (Bill) சீக்கிரத்தில் கூடப்போகும் சட்ட சபையில் கொண்டு வருவதற்காக, அக்டோபர் 3ம் தேதி கெஜட்டில் அம் மசோதாவை பிரசுரம் செய்திருக்கிறார். அதில் கட்டாய இலவசப் படிப்பை அமுலுக்குக் கொண்டுவரும் அதிகாரம் அரசாங்கமே வைத்துக்கொள்ள வேண்டுமாம். இரண்டாவது தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளை பாடசாலை வயதுவரை தொடர்ச்சியாக வாசிக்கச் செய்ய வேண்டுமாம். அவ்விதம் தவறினால் தாய் தந்தையர்கள் மீது வரி சுமத்தப்படுமாம். மூன்றாவது டைரக்டர் துரையவர்களுடைய அதிகாரம் இன்னும் அதிகப்படுத்தவும். அரசாங்கத்தார் ஜில்லாக் கல்விச் சபைகள் செய்யும் காரியங்களை மாற்றவும் சட்டங்கள் ஏற்படுத்தப்படுமாம்.

முதலில் குறித்துள்ளபடி பொது ஜனக் கல்வியை பறப்புவதற்கு அரசாங்கமே பொறுப்பை ஏற்றுக் கொள்வதை நாம் மனமுடன் வரவேற்கின்றோம். ஏனெனில் அப்பொழுதுதான் அரசாங்கத்திற்கு ஆரம்பக்

கல்வியின் நிலை நன்றாக விளங்கும். வரி வசூல் எவ்வளவு ஆகின்றது. அதில் எவ்வளவு பணம் ஆசிரியர்களுக்கு சிலவாகிறது, அனாவசியமாக எவ்வளவு பணம் வீணாக்கப்படுகிறதென்பது நன்றாக விளங்கும். கட்டாய இலவச படிப்பு நம் நாட்டில் பரவாமல் இருப்பதற்கு ஏற்பட்டிருக்கும் முட்டுக் கட்டைகளெல்லாம் நன்றாக தெரியும். ஆதலின் இது விஷயத்தில் நாம் குறைகூற இடமில்லை.

இரண்டாவதாக பிள்ளைகளை யனுப்பாத தாய் தந்தையர்களுக்கு வரி விதிப்பதென்பதுதான் நடவடிக்கையில் நடவாத காரியம். ஏனெனில் அநேக தாய் தந்தையர்களுக்கு தற்கால படிப்பில் நம்பிக்கை கிடையாது. மேலும் நமது நாட்டில் 100க்கு 80 பேர் கிராமங்களில் வசிப்பவர்கள். ஒரு குடும்பத்தில் 6, 7 வயதுள்ள ஒரு சிறுவனோ சிறுமியோ இருந்தால் வியவசாய வேலையோ, ஆடுமாடு மேய்க்குந் தொழிலோ, வேறுவிதமான கைத்தொழிலோ செய்ய வேண்டியவர்களாயிருக்கின்றார்கள். நமது நாடு ஏழ்மை குடிகொண்ட நாடு. ஒரு இந்தியரின் தின வரும்படி 0-1-6, இங்கிலாந்தில் வசிக்கும் ஒருவனுடைய தின வரும்படி 2-8-0. கிராமாந்திரங்களில் சம்பளம் கொடுத்து படிப்பதென்பது குதிரைக் கொம்புதான். பாடசாலை வைத்து இலவசமாக வாசிக்கச் சொன்னாலோ, கிராமவாசிகள் தங்களுடைய குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்பும்படியான நிலையிலில்லை. அவர்கள் குடும்பத்தில் ஏற்பட்ட தொழிலை யார் செய்வது. அவர்கள் குழந்தைகளே செய்யவேண்டும். இன்றேல் அவர்கள் குடும்பம் சரிவர நடவாது. இது ஒருமுக்கியமான விஷயம். இதைப்பற்றி அரசாங்கத்தார் கவனித்தார்களா என்பதுதான் நமது கேள்வி. இவர்கள் சொல்லும் அபிப்பிராயம் பட்டணங்களில் சற்று நடந்தால் நடைபெறுமே யொழிய கிராமாந்தரங்களில் ஒன்றும் நடவாது. எத்தனை பாடசாலைகள் திறந்தாலும் பயன்



படாது. முதலில் கிராம ஜனங்களின் பொருளாதார நிலை உயர்த்தப்பட வேண்டும். ஆயிரக் கணக்கான கிராமவாசிகள் உடுக்க உடையும், உண்ண ஒரு வேளை உணவும் இல்லாமல் பரிதவித்து நிற்கின்றனர். இந்த நிலையில் ஏழைத் தாய் தந்தையரிடம் குற்றம் சாற்றி வரி வசூலிப்பது எவ்வாறு பொருந்தும்.

மூன்றாவது டைரக்டர் துரையவர்களுக்கு இன்னும் அதிகாரம் அதிகப்படுத்த வேண்டும், ஜில்லாக் கல்விச் சபைகளுக்கு அதிகாரம் குறைக்கப்பட வேண்டுமென்ற அரசாங்கத்தின் நோக்கம் கண்டிக்கத்தக்கது. மக்கள் சுதந்திர தாகத்தில் தவித்துக்கொண்டிருக்கும் இக்காலத்தில் கல்விச் சம்பந்தப்பட்ட பெரியார்கள் நடத்திவரும் சபைகளின் செல்வாக்கை குறைப்பதென்பது ஆரம்பக் கல்வியை இன்னும் ஒரு அடி பாதாளத்தில் புதைக்க அரசாங்கம் வழிதேடுவதாகும். சிலர் தங்கள் சுய நலத்தைக் கருதியோ, கட்சிப் பிரதி கட்சிகளில் இடுபட்டோ, கல்விச் சபைகளில் தவறுதலாக நடந்திருக்கலாம். இத்தியாதி விஷயங்கள் தற்கால பொது ஜன இயக்கங்களில் உண்டாவது இயற்கை. தற்போது உலகம் போற்றும் காங்கிரஸ் கட்சியிலும், சுய நலம் கருதுவோர்களும், காந்திமகான் சொல்வதைப்போல் நடவாமல் அவர் முகஸ்துதிக்காக தலையை ஆட்டிவிட்டு நடவடிக்கையில் மாறாக நடக்கும் போலிதேசத் தொண்டர்களும் காங்கிரஸில் இருப்பதினாலல்லவா காந்திமகான் காங்கிரஸைவிட்டு விலகவேண்டுமென்று யோசித்துக் கொண்டிருக்கின்றார். இதனால் காங்கிரஸை அயோக்கியர்கள் சபையென்று சொல்லிவிட முடியுமா? காங்கிரஸின் தியாகத்தை ஒவ்வொரு இந்தியனும் மறக்க முடியுமா? இதனால் காங்கிரஸின் செல்வாக்கை குறைக்க மக்கள் பிரியப்படுவார்களா? காங்கிரஸின் பெயரால் வாழும் போலி தேசபக்தர்களை விலக்கி யோக்கியர்களை

காங்கிரஸில் சேர்ப்பது முறையல்லவா? அம்மாதிரியே, யேதோ சிலர் கல்விச்சபை அங்கத்தினர்கள் தவருதலாக நடந்தால் எல்லாக் கல்விச்சபை ஆதிக்கத்தைக் குறைக்க அரசாங்கம் நினைப்பது நியாயமாகாது. இவ்விதம் கல்விச் சபைகளில் ஏற்பட்டிருக்கும் குற்றத்திற்கு யார் பொருப்பாளிகள்? அரசாங்கமே. ஏனெனில் கல்வித சபைகளுக்கு ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒவ்வொரு தாலுக்கா போர்டு அங்கத்தினரை தேர்ந்தெடுத்தனுப்பும்படி சட்டம் செய்திருந்தனர். அதன்படி ஒவ்வொரு ஜில்லாக் கல்விச் சபைக்கும் சுமார் பாதிக் கல்விச்சபை அங்கத்தினர்களுக்குமேல் தாலுக்காபோர்டு அங்கத்தினர்களே நிறைந்தனர். பெரும்பாலும் இந்தத் தாலுக்காபோர்டு மெம்பர்கள் எவ்வகையிலும் ஆரம்பக் கல்வியில் பெரும்பாலும் இடுபடாதவர்கள். ஒரு கல்விச்சபையென்றால் கல்விச் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களோ அறிஞர்களோ அதிகப்படியாக இருக்க வேண்டும். இதைவிட்டு கல்விச் சம்பந்தமோ, ஊக்கமோ, இல்லாத போர்டு, முனிசிபல் மெம்பர்களை நிறப்பினால் எவ்வாறு கல்விச் சபைகள் ஒழுங்காக நடக்கும்? தற்போது தாலுக்கா போர்டுகள் ஒழிந்தன. இனியாவது அரசாங்கத்தார் கல்விச் சபைகளில் ஆசிரியர்களையும், ஆசிரிய மானேஜர்களையும், அதிகப்படியாகச் செய்து, அதிகாரங்களையும் கல்விச் சபைகளுக்கு அதிகம்கொடுத்தால், கல்விச் சபைகள் ஆரம்பக் கல்வியை எவ்வளவோ விருத்தி செய்யமுடியும். அரசாங்கத்தார் இது விஷயத்தை நன்றாக கவனிப்பார்களென நம்புகின்றோம்.

கல்விச் சம்பந்தமாக (Hartog Committee) "ஹார்டாக் கமிட்டி" செய்திருக்கும் ரிபோர்ட்டில் "இந்தியா முழுதும் கட்டாய இலவசப் படிப்பை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமானால் கட்டடங்களும், பென்சு, போர்டு, முதலிய சாமான்களின் சிலவுகள் தவிர்த்து



சுமார் 20 கோடி ரூபாய்கள் அரசாங்கம் சிலவு செய்ய முன்வரவேண்டும். கட்டாய இலவசப் படிப்பை திடீரென அமுலுக்கு கொண்டுவர முடியாது, முதலில் அதிகப் பணச் செல்வாக்குள்ள இராஜதானிகளில் முதலில் கட்டாய இலவசக் கல்வியை கொஞ்சம் கொஞ்சமாக பறப்ப முயலவேண்டும். இவ்விதம் கொஞ்சம் கொஞ்சமாக கல்வியைப் பறப்ப ஓர் திட்டம் அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்" என்பதாக எழுதியிருக்கின்றார்கள்.

அதன் பிரகாரம் அரசாங்கம் முதல் முதலில் தற்போதுள்ள (Grants in aid) ஸ்கேல் கிராண்டுத் தொகைகளை அதிகப்படுத்த வேண்டும், ஆரம்பக் கல்விக்காக, வருடா வருடம் பட்ஜட் செஷனில் குறைந்தது 4, 5 லட்சங்களாவது உயர்த்தப்படவேண்டும். "நீருயர நெல்லுயரும்" என்ற ஔவையார் அமுத வாக்கின்படி அரசாங்கம் பணம் அதிகமாகச் சிலவு செய்யச்செய்ய ஆரம்பக்கல்வி நன்றாய் நமது நாட்டில் குறைந்த காலத்தில் தீவிரமாக பரவுமென்பதில் ஐயமில்லை. அரசாங்கத்தார் பணப்பையை அவிழ்க்க முன் வருவார்களாக.

# 35 வருடங்களாய்

உலகப் பிரசித்தி பெற்ற திரேக புஷ்டிக்கும் தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

## மதன மஞ்சரி

டப்பி 1-க்கு விலை ரூபா 1.

40 மாத்திரைகள் அடங்கிய

இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு நரம்பு தளர்ச்சி இவைகளை நாசமாக்கி திரேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து

இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும், தரும்.

**இனம்! வைத்திய வித்தியா இனம்!!**

இப்புத்தகம் வேண்டுவோர் கடிதம் எழுதினால் தபால் செலவு இல்லாமல் அனுப்பப்படும்.

**மதன மஞ்சரி பார்மஸி. 1-94, சைனா பஜார் ரோட், மதராஸ்.**


# எமது தமிழ்ப் பிரசுரங்கள்

**வி. எஸ். சிவசாம்ப ஐயர், பி. ஏ. எல். டி. இயற்றியவை.**

## கலைமகள் வாசகங்கள்

வி. வீரராகவன், எம். ஏ. இயற்றியவை.

| | | | |
|---|---|---|---|
| கலைமகள் வாசகம் முதல் வகுப்பு | 0 | 2 | 0 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 3 | 0 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 4 | 0 |
| நான்காம் வகுப்பு | 0 | 5 | 0 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 6 | 0 |

## கலைமகள் கதாவாசகம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் விலை .... | 0 | 2 | 0 |
| இரண்டாம் புத்தகம் விலை .... | 0 | 3 | 0 |

## கலைமகள் கணித நூல்

எஸ். தருமலிங்க நாய்கசர்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது புத்தகம் (1, 2, வகுப்பு) அணா | 0 | 5 | 0 |
| 2-வது புத்தகம் (3வது வகுப்பு) ,, | 0 | 6 | 0 |
| 3-வது புத்தகம் (4வது வகுப்பு) ,, | 0 | 8 | 0 |
| 4-வது புத்தகம் (5வது வகுப்பு ,, | 0 | 9 | 0 |

## நீதிக்கட்டுரைக் கோவை

வி. ஞானதிக்கம், பி. ஏ. எல். டி.

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் அணா .... | 0 | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் ,, .... | 0 | 7 | 0 |
| கலைமகள் நீதிக்கதைகள் ,, .... | 0 | 4 | 0 |

## இந்து தேச சித்திர சரித்திர கதைகள்

டி. ஆர். ரங்கசாமி ஐயங்கார் எம். ஏ., எல். டி.

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் விலை அணா .... | 0 | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் ,, .... | 0 | 5 | 0 |

எஸ். ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள், பி. ஏ., எல். டி. எம். ஆர். ஏ. எஸ்.

| | | | |
|---|---|---|---|
| வட ஆற்காடு பூகோளம் அணா .... | 0 | 4 | 0 |
| செங்கற்பட்டு பூகோளம் ,, .... | 0 | 5 | 0 |

## பாலர் கணிதம்

எம். எஸ். சுந்தரேஸ்வரன், எம். ஏ. எல். டி.

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் விலை | 0 | 5 | 0 |
| இரண்டாம் புத்தகம் | 0 | 7 | 0 |
| மூன்றாம் புத்தகம் | 0 | 6 | 0 |
| நான்காம் புத்தகம் | 0 | 8 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | 9 | 0 | 0 |

**எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி.**

நெ. 2, சகின் லேன் பீச்சு ஜார்ஜ் டவுன், மதராஸ்.

## சுக வாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்ருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைபோல் பாதுகாக்கும். 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

இனும்! இனும்!! இனும்!!!

**"இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி"**

உடனே விலாசத்தை தெரிவியுங்கள்:

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
**26, பிராட்வே, மதராஸ்.**



காலஞ்சென்ற ராவ்சாஹிப்
தி. ம. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்
இயற்றிய

## இனிய தமிழ் நாவல்கள்

| | | | |
|---|---|---|---|
| கமலாட்சி | 1 | 12 | 0 |
| விஜய சுந்தரம் | 2 | 0 | 0 |
| ஞான சம்பந்தம் | 1 | 4 | 0 |
| சிவ ஞானம் | 1 | 4 | 0 |
| ஞானப் பிரகாசம் | 1 | 12 | 0 |
| ஹரிச்சந்திர (நாடகம்) | 1 | 0 | 0 |

**ஆரம்பக் கல்வி புத்தகசாலை,**
**94-95, புதுத் தெரு, மண்ணடி, மதராஸ்.**


# Malayala Vaidya Nilayam

**P. B. No. 53, Madras.**

## மலையாள வைத்திய நிலயம்

தபால் பெட்டி நெ. 53, மதராஸ்.

### ஔஷதங்கள் வாங்க விரும்புவோர் முக்கியமாய் கவனிக்க வேண்டிய விதிகள்.

இப்பட்டிகையில் காணப்படும் ஔஷதங்கள் தவிர இன்னும் எம்மிடம் மிகப் பிரயாசையுடனும், பல புடங்களிட்டும் செய்து முடித்த பஸ்பங்கள், செந்தூரங்கள், கஷ்டப்பட்டு முடித்த கிருதங்கள், மாத்திரைகள், முதலியவைகளும் இருக்கின்றன. எத்தகைய நாட்பட்ட தீராத ரோகமாயிருந்தாலும் நேரில் எம்மிடம் வரமுடியாதவர்கள் எமக்கு நோயின் விபரத்தை விளக்கமாக விவரித்து எழுதினால் உண்மையான மருந்துகளை அனுப்பிவைப்போம். எம்மருந்துகளனைத்தும் மிகப் பிரயாசையின்மீது அரிய மலையாள வன மூலிகைகளைக்கொண்டு முறைப்படி முடித்திருப்பதால் பாலர் யௌவனர், விருத்தர்வரை யாவரும் சிறிதும் பயமில்லாமல் உபயோகித்து வரலாம். எங்கள் மருந்துகள் சரீரத்திற்கு எவ்விதக் கெடுதியும் செய்யாதென்று நாங்கள் உறுதி கூறுகின்றோம். ஒருமுறை எங்கள் மருந்துகளை வாங்கிப் பரீக்ஷித்தால் நாங்கள் சொல்லாமலே உண்மை விளங்கும். பரீக்ஷியுங்கள்! பரீக்ஷியுங்கள்!! உண்மைக்கு எக்காலத்திலும் அழிவில்லை. எம்முடைய ஆலோசனை விரும்புவோர்கள் கட்டாயம் ரிப்ளை கார்டாவது $1\frac{1}{4}$ அணா ஸ்டாம்பாவது அனுப்பி பதில் பெற்றுக்கொள்ளலாம். அப்படி அனுப்பாத கடிதங்களுக்கு எம்மால் பதில் கொடுக்க முடியாது.

1. இப்பட்டிகையில் விவரிக்கப்பட்டுள்ள ஔஷதங்களை வாங்க விரும்புகிறவர்கள் எமது நிலயத்திற்கு நேரில் வந்தோ, அல்லது எம்முடைய நிலயத்திற்கு முன்பணமனுப்பியோ, அல்லது வி. பி. தபால் மூலமோ, பெற்றுக்கொள்ளலாம். ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்து ஜாக்கிரதையுடன் அனுப்பப்படும்.

2. எமக்குக் கடிதம் எழுதும் ஒவ்வோரன்பர்களும் ஒவ்வொரு கடிதத்திலும் தத்தம் மேல் விலாசத்தைத் தெளிவாக எழுதவேண்டும். அதாவது ஊர், பேர், நெம்பர், தெரு, கிராமம், தாலூக்கா, தபால் ஆபீஸ் முதலியவைகளைத் தெளிவாக இங்கிலீஷிலோ, தமிழிலோ, மலையாள பாஷையிலோ, தெலுங்கிலோ எழுதியனுப்ப வேண்டும். விபரமாக எழுதப்படாத கடிதங்களுக்கு பதிலாவது மருந்துகளாவது அனுப்ப முடியாது.

3. இதில் கூறப்பட்டுள்ள மருந்துகளைத்திற்கும் வி. பி. தபால் மூலமாக அனுப்ப உண்டாகும் தபாற் செலவு, மணியார்டர் கமிஷன், முதலியவை தங்களைச் சார்ந்ததே.

4. இப்பட்டிகையில் கூறப்பட்டுள்ள அளவில் பாதியோ, விலையில் குறைத்தோ, அல்லது தபால் சார்ஜ் குறைத்தோ வேண்டுமென்று எழுதுபவர்களின் கடிதங்களை கவனிக்க முடியாது.

## கடல் கடந்த அன்னிய நாடுகளிலுள்ள நேயர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

சிலோன், கொளும்பு, ஜாப்னா முதலிய தேசங்களிலுள்ள நண்பர்களுக்கும், சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா, கோலாலம்பூர் (F. M. S. & S. S.) முதலிய கடல் கடந்த அன்னிய நாடுகளிலுள்ள நேயர்களுக்கும் தெரிவித்துக்கொள்வது யாதெனில் எம்முடைய மருந்துகள் வேண்டுபவர்கள் ஆர்டர் கொடுக்கும்பொழுது மருந்தின் தொகையை முற்றிலுமாவது, அல்லது ½ பாகமாவது, முதலிலேயே முன்னதாக மணியார்டர் மூலம் அனுப்பி அதற்கு வேண்டிய மருந்துகளை கடிதம்மூலம் தெரிவித்தால் பணம்கிடைத்தவுடனே கோரும் மருந்துகளை உபயோக முறையுடன் தவக்கமில்லாமல் அதி ஜாக்கிரதையுடன் சாமான்களின் விலைகள் குறிப்பிட்ட (Invoice) பட்டியுடன் அனுப்பிவைக்கப்படும். அங்ஙனம் பணம் அனுப்பப்படாத கடிதங்களுக்கு மருந்துகளாவது பதிலாவது அனுப்ப முடியாதென்பதை இந்த விண்ணப்பம் மூலம் அறிக்கை செய்கிறோம். ஏனெனில் தபால் அதிகாரிகள் சட்டப்படி டை தேசங்களுக்கு அனுப்பப்படும் பார்சல்களை தபால் ஆபீஸ் தவணை பிரகாரம் நேயர்கள் எடுக்காததை முன்னிட்டு அப்பார்சல்களை திருப்பிவிடுகிறதினால், அப்பார்சல்களுக்கு நாங்கள் இரட்டிப்பாக தபால் செலவு, தீர்வை முதலியன பணம் கட்டி பெற்றுக்கொண்டு எங்களுக்கு நஷ்டம் ஏற்படுவதினால் இவ்வகை நஷ்டத்திற்கு இடம் தராமல் ஒவ்வொரு நண்பர்களும் இதில் குறிப்பிட்டிருக்கும் பிரகாரம் முன்பணத்துடன் ஆர்டர் கொடுக்குமாறு வேண்டுகின்றோம்.

N. B:—மோரீஸ், நெட்டால், சுமத்ரா, டில்லி முதலிய தேசங்களுக்கு V. P. System இல்லாததைக்கொண்டு மருந்தின்கிரயத்தையும், தபால்செலவு பூராவும் சேர்த்து (British Postal Order) தபால் செக்காக மருந்தின் ஆர்டருடன் அனுப்பிவிட வேண்டும். பணம் எமக்குக் கிடைத்தவுடன் கோரும் மருந்துகளை காலதாமதமின்றி உடனே ரிஜிஸ்டர் பார்ஸலாக அனுப்பி, விவரத்திற்கு பதில் எழுதச் செய்வோம். கடல் கடந்த அன்னிய நாடுகளில் உள்ளவர்களுடைய மேல்விலாசங்களை மட்டும் இங்கிலீஷிலேயே எழுதவேண்டியது மிகவும் அவசியமாகும்.



### போகரிஷி ப்ரம்மானந்த கல்பம் என்னும்

## ஜீ வா ன ந் த

# வீரிய விருத்தி ரசாயனம்

முஷ்டி மைதுனம் என்னும் கொடிய தீக்குணத்தினாலாவது, அளவிற்கு அதிகமாய் லௌகீக சுகத்தில் ஈடுபட்டதினாலாவது, மேகரோக ஸ்திரீகளின் கூட்டுறவினாலாவது, ஏற்பட்டுவரும் எவ்வித துஷ்ட நோய்களினின்றும் ஸ்திரீ—புருஷர்களுக்கு நபும் ஸகம் என்றும் பேடித்தனத்தையும், அறவே நீக்கி, புருஷத்துவத்தை அபரிமிதமாகத் தரவல்லதான ஓர் உத்தம ஔஷதம்.

எழுவகைப் பிறவியினுள் மானிடப்பிறவிதான் சிரேஷ்டமுடையது. இப்பிறவியினாலான பயன் எல்லா வல்ல கடவுளைத் துதிசெய்து, கடைசியில் பரமானந்தத்தை அடையவேண்டியது. இவ்வழியை அடைவதற்கு தேக ஆரோக்கியமும், ஆயுளும் முக்கியமாய் வேண்டற்பாலது. இந்திரிய அழிவினால் ஏற்படும் கொடிய குணங்களை முற்றத் துறந்த ஞானியாம் பட்டினத்தடிகளும் அவர் அருளிய பாக்களில் செவ்வனே செப்பியிருக்கின்றனர். நாங்கள் "தீப்பழக்கம்" என்று இங்கு கூறியது என்னையெனில், நமக்கு சுகமும், ஆனந்தமும் கொடுக்கும் தெய்வாமிர்தமாகிய இந்திரியத்தை வீணே வெளிப்படுத்துவான்வேண்டி காமவெறிகொண்ட மூடர்கள் கண்டு பிடித்திருக்கின்ற இயற்கை விரோத வழிகள்; இவ்வழிகளில், முதன்மை பெற்று முக்கியமாய் வாலிபக் கூட்டத்தாரால் கையாண்டு வருவது. "அஸ்தப் பிரயோகமாகும்." இதை நினைக்க உடல் நடுங்குகின்றது. இந்த அஸ்தப்பிரயோகத்தினால் வரும் எல்லாவித தீமைகளையும் நம் அறிவிலிகள் உணராமல் இதில் ஈடுபட்டிருப்பது மிக்க விசனிக்கத்தக்கதாகும். இதைக் கைக்கொண்ட ஒருவன், நாளுக்கு நாள் பலமும், ஆரோக்கியமும், தேஜசும் குறைந்து, கடைசியாக ஸ்திரீகளோடு சேர்ந்து உலக ஆனந்தத்தை அநுபவிக்க சக்தியற்றவனாய் விடுகிறான். இந்த தீச்செயல்களிலிருந்து நம் சகோதரர்களை காப்பாற்றவேண்டியது முக்கிய கடமையாகும். இதுபற்றியே, இவ்விஷயமாக சில உண்மைகளை இதனடியில் நாங்கள் விவரித்திருக்கின்றோம். இதை கனவான்கள் முற்றும் படித்து, உண்மை விஷயத்தை அறிவார்களென நம்புகிறோம்.

எல்லாம்வல்ல கடவுள் நமக்கு "ஆண் குறியை" மிகுந்த மெல்லிய நரம்புகளால் உண்டாக்கி, மிருதுவான மாமிசத்தால் மூடி, தகுந்த இடத்தில் யாதொரு ஆபத்தும் எளிதில் நேராதபடி, மிகவும் பத்திரமாக அமைத்திருக்

கிறார். "கண்ணிருந்தும் குழியில்விழ துணைக்குமுண்டோ" என்றுரைத்தபடி, மதியிழந்த வாலிபர்கள் இந்த மெதுவான அவயவத்தை கைப்பிரயோகத்தால் நெகிழச்செய்து உடைத்து, அவதியுறச் செய்கின்றனர். அந்தோ! இவ்வறிவிலிகள் தாங்கள் செய்யும் தலைமை வாய்ந்த குற்றத்தையும், அதனால் விளையும் தீக்குணங்களையும், கொஞ்சமேனும் ஆய்ந்தோய்ந்து பார்க்கிறார்களா? இஃதென்ன கொடுமை, கடவுளின் கட்டளையை மீறி, பாபத்துக்குள்ளாகிறார்கள். நரம்புகளின் பலம் இழக்கப்பெற்று, தான் செய்யவேண்டிய வேலையைச் செய்ய சக்தியற்றவர்களாய், பெண்களின் பரிதாபத்திற்கும், பரிகாசத்திற்கும், ஆளாகி விடுகின்றனர். இயற்கை விரோதமான இத்துர்ப்பழக்கத்தால் அவர்களுக்கும் பலவிதமான நோய்கள் அணுகி அந்நோய்கள் தினே தினே விருத்தியாகின்றன. முகவிலாசமும், அழகும், நாளாவட்டத்தில் மழுங்கிப்போகின்றது.

மனிதர்களுக்கு வரும் பெருநோய்களுக்கு காரணமென்னவென ஆலோசிக்கின், இந்திரியத்தை சரிவரக் காப்பாற்றாமல் அழிப்பதுதான் என்பது தெரிகின்றது. கடவுளின் கட்டளைப்படி, ஸ்திரீ புருஷர்களின் சேர்க்கையால் தாது வெளிப்படுவதற்கும், மேற்கூறிய துர்ப்பிரயோகத்தால் இந்திரியத்தை வெளிப்படுத்துவதற்குமுள்ள வித்தியாசத்தை நீங்களே தேர்ந்து தெளிமின்! காமேஷ்டப்படி நினைத்தபோதெல்லாம், அறிவின் குறைவால் இந்திரியத்தை வெளிப்படுத்துவதால், தாதுக்களுக்கு பலக்குறைவும், நரம்புகளுக்கு வலியும் ஏற்படுவதுடன், இந்திரிய ஸ்தானத்திலும் தீங்கு ஏற்படுகின்றது. மேன்மேலும் உற்பத்தியாகும் இந்திரியத்தைச் சேகரித்து நிற்கவைக்க அந்த இடம் சக்தியில்லாததாகி, மூத்திரம் போகும்பொழுதும், நித்திரையிலும், மற்ற சமயத்திலும், இந்திரியம் தானே வெளிவருகின்றது. இந்திரியம் அதில் தங்கி முற்றிலும் கெட்டிப்பட இடமில்லாமற் போகின்றது. இந்திரிய வலிவில்லாதவர்களுக்கு பிறக்கின்ற குழந்தைகள் அற்பாயுளோடு மடிகின்றன.

இத்தன்மையாக, ஜீவசக்தியை யிழந்த நம் நாட்டு மக்கள் மீண்டும் அச்சக்தியைப்பெற்று, இன்பவாழ்வெய்தி, இல்வாழ வேண்டுமெனும் பேரவாயிருப்பின், உலக நலங்கருதி, மக்கள்மேல் அன்புடனும், கருணையுடனும், குறைந்த விலைக்கு நாங்கள் விற்கும், இந்த ஜீவானந்த வீரியவிருத்தி ரசாயனத்தை ஒருமுறை வாங்கி, உண்டு, அதனால் அடையப்பெறும் பலனை அடைந்து, பூரண சுகத்தோடு இல்லற தருமத்தை நடாத்த கருணைபுரியுமாறு எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளை வணங்குகின்றோம்.

இந்த ஜீவானந்த வீரிய விருத்தி ரசாயனத்தில் சேர்ந்துள்ள சில முக்கிய மருந்துகள்:—வெள்ளி, கல்மதம், கல்நார், சிலாசத், மான் கொம்பு, இது முறைப்படி சுத்திசெய்து, அரிதாகக் கிடைக்கக்கூடிய மலையாள வன



மூலிகையின் சாற்றால் அரைத்து, புடம் செய்து, அளவுப்படி இந்த ரசாயனத்தில் சேர்த்திருக்கிறோம். இந்த பஸ்ப வகைகள் திரேகத்திலுள்ள எல்லாவித உஷ்ணங்களையும் அறவே ஒழித்து, வாயுவின் உபத்திரவங்களை ஓடச்செய்து, நம் திரேகத்திலுள்ள எல்லா முக்கிய ஸ்தானங்களுக்கும் (மூளை, இருதயம் இவைபோன்றது) திடத்தையும் பலத்தையும் கொடுக்கும். இந்த பஸ்பங்களின் குணங்களை முற்றுமுணர்ந்த வைத்திய சாஸ்திரிகள்தான் நன்கு அறியக்கூடும். தின்பதற்கு ருசிகரமாயிருக்கும் விதமாக பருப்பு விதங்களில் பிஸ்தா, வாதுமை, சல்கூஜா, அக்ருட் முதலியதும், யூனானி மிஸறிகளில் ஷக்காகுல்மிஸறி, சாலாமிஸறி முதலிய மேலான மிஸறிகளும், வித்து வகையில் நீர் முள்ளி, பருத்தி, சுரை முதலான மேலான வித்துகளும், மணமுள்ள குங்குமப்பூ, கோரோஜனை, பச்சக்கற்பூரம் முதலிய வாசனை திரவியங்களும் அநேகவித வீரியமுள்ள கடைச்சரக்குகளும், தேன், ஆவின்பால், ஆவின் நெய், இவைகளும் சேர்த்து சரியான பாகத்தில் இந்த வீரிய விருத்தி ரசாயனத்தை செய்திருக்கிறோம்.

இவ்வளவு குணவிசேடமுள்ள மருந்தை குணத்திற்கேற்ற அதிக விலைவைத்து விற்கவேண்டியது அவசியமென்றாலும், அநேக மருந்துகளை வாங்கி உட்கொண்டு பிரயோஜனமடையாமல் மனவெறுப்படைந்தவர்கள், எங்களுடைய ரசாயனத்தை வாங்கி உட்கொண்டு, அதன் குணத்தை அநுபவித்து எங்களை களிப்படையச் செய்வார்களென்ற நம்பிக்கையுடன் இந்த ரசாயனத்தை சகாயமான விலைக்கு விற்க தீர்மானித்திருக்கிறோம். இந்த ரசாயனத்திற்கு யாதொரு பத்தியமுமில்லை. துற்குணஞ் செய்யும் சுபாவமதற்கில்லை. பலதிறப்பட்ட சீதோஷ்ண ஸ்திதிலிருந்து வாசஞ் செய்பவர் எப்பருவமுடையவராயிருப்பினும், ஆண்-பெண் இருபாலரும், இந்த ரசாயனத்தை நிர்ப்பயமின்றி வாங்கி உண்டு சுகமடையலாம். இந்த லோகோபகாரமான நன்முயற்சிக்கு நீங்கள் உடன் நின்று ஒத்தாசை செய்வதோடு நிற்காமல் உங்கள் பந்து மித்திரர்களுக்கும் எம்முடைய ரசாயனத்தைப்பற்றி சிபார்சு செய்ய வேண்டுகின்றோம்.

48-நாள் சாப்பிடக்கூடிய 2-சேர் டப்பி 1-க்கு ரூ. 3—8—0
24-நாள் சாப்பிடக்கூடிய 1-சேர் டப்பி 1-க்கு ரூ. 2—0—0

இனாம்! இனாம்!!

முழு விலாசம் தெரிவிப்பவர்களுக்கு "ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண வரப்ரசாதம்" இனாமாய் அனுப்பப்படும்.

மலையாள வைத்திய நிலயம், தபால் பெட்டி நெ. 53, மதராஸ்.

## லீலா அதிசயன்

(இது ஓர் மேற்பூச்சு மருந்தாகும்.)

மிதமிஞ்சிய சம்போகத்தாலும், முஷ்டிப்பிரயோகத்தாலும், தாதுவை அதிகமாக நஷ்டமாக்கிக் கொள்வதனுலும், இராஜ கருவிகள் பலஹீனமடைந்து சம்போக சக்தியை அனுபவிக்கச் சக்தியற்று போனவர்களுக்கு இது ஒரு தேவ ஔஷதமேயென்று சொல்லலாம். உள்ளுக்கு எமது ஜீவானந்த வீரிய விருத்தி ரசாயனத்தைச் சாப்பிட்டுக்கொண்டு, வெளிக்கு லீலா அதிசயனைப் பூசிவந்தால், தளர்ந்து துவண்டு சுருங்கிவிட்ட ராஜ கருவிகள் முறுக்கேறி, புஷ்டியாயும் நீண்டும், பருத்தும், வஜ்ஜிரம் போன்று கடினமாகவும் ஆகிவிடுவதுடன், விஷய சுகத்தை நெடுநேரம் அனுபவிக்கச் செய்யும். இதில் ஸ்திரீ புருஷர் இருபாலரும் பூர்ன இன்பமடைவார். இதனை ஒருமுறை உபயோகித்து அனுபவம் கண்டவர்கள் மறுமுறை இதை விட்டுவிட மனந்துணியமாட்டார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1-அவுன்ஸ் புட்டி 1-க்கு | 3 | 8 | 0 |
| ½ அவுன்ஸ் புட்டி 1-க்கு | 2 | 0 | 0 |

## குன்மரோக சம்ஹாரி

(எவ்வித குன்மரோகங்களுக்கும் பந்தயங்கட்டி பரீக்ஷிக்கலாம்)

சரியான நேரத்தில் சாப்பிடாமல் இருந்தாலும், சாப்பிட்டு ஜீரணமாகாதமுன் சம்போகம் செய்தாலும், அமித சம்போகத்தாலும், குன்மரோகம் உண்டாகும். இது உண்டாகிவிட்டால், சாப்பிட்டவுடனே வயிற்றில்வலி, சதா வயிறு நிறைந்ததுபோலிருத்தல், ஆகாரத்தின்மீது வெறுப்பு, சாப்பிட்ட ஆகாரத்தை வாந்தி எடுத்துவிடல், மலபந்தம் அடிக்கடி அபான வாயுபரிதல், குலை எரிச்சல், குத்திக்குத்திவரும் புளி ஏப்பம், வயிற்றில் பந்துபோல் காற்று அங்கும் இங்கும் திரண்டெழும்புதல், வயிற்றுப்பிசம், வயிற்றுப்பொருமல், அக்னிமந்தம், வாய்நாற்றம், தலைக்கனம், இடுப்புவலி, நெஞ்சுத்துடிப்பு, ஈரலில் எரிச்சல், நெஞ்சைப்பிளப்பதுபோல் தோன்றுதல் முதலிய நோய்களால் அவஸ்தைப்படுவோர்கள், எங்கள் குன்மரோக சம்ஹாரியை சாப்பிட்ட மாத்திரத்திலே டை வியாதிகளை வெகு சுலபாகச் சீக்கிரத்தில் சொஸ்தம் செய்துவிடும். எவ்வளவு ஆகாரம் சாப்பிட்டாலும் வயிற்றில் பசி எடுத்துக்கொண்டேயிருக்கும். தாங்க முடியாமல் இந்த நோயோடு வாழ்வதைவிட உயிர் போக்கிக்கொள்வதே மேல் என்று நினைத்துக்கொள்ளும் ஒவ்வோர் நண்பர்களும் டை குன்ம வியாதிகளுக்கு குறிதப்பாத சிறந்த சஞ்சீவி, எங்கள் குன்மரோக சம்ஹாரியே யாகும் என்பதைப் பரீக்ஷித்தவர்களே அறிவார்கள். இந்த உத்தரவாதமான மருந்தின் விலையோ மிகமிகச் சொற்பமே.

விலை இரண்டுவித மருந்துகளடங்கிய செட் 1-க்கு ரூபா 3 8 0



## மேக ராஜாங்க கல்பம்

மேகநோய் ஸ்திரீ புருஷரை உள்ளுக்குள்ளவே அரித்துக்கொண்டுபோகும் ஒரு கொடிய நோயாகும். புருஷனுக்கிருந்தால் ஸ்திரீக்கும், அவர்களிடமிருந்து குழந்தைகளுக்கும் ஒட்டிக்கொண்டு பரம்பரையாகப்பற்றி வருவதில் இது மகா பெரிய நோயாகும். மிதமிஞ்சிய சம்போகத்தாலும், விபசாரிகளின் சேர்க்கையாலும் பொதுவாக இந்நோய் உண்டாகின்றது. இம்மேகம் முற்றிதூர்த்த ஸ்திரீகளுடன் சேருவதால் ஏற்படும் கொறுக்கு, குஷ்டம், மேகப்படை, அரையாப்பு, யோனிப்புற்று, லிங்கப்புற்று, கண்டமாலை, பவுத்திரம், வெள்ளை வெட்டை, நீரடைப்பு, சொறிசிரங்கு நமைச்சல், குழிப்புண், மூக்கு இத்துவிழுதல், காது தடிப்பு, மூட்டுக்களில் நீர்தங்கி நீட்ட மடக்க முடியாமல் அவஸ்தைப்படுதல், ஆறாத ரணங்கள், நெஞ்சுக்குழியிலுண்டாகும் ரணங்கள், மேகவாய்வு அடிக்கடி உண்டாகும் பீஜவீக்கம், குடலிரைச்சல், குலைவலி, கைகால்களில் சொரணையின்றி மரத்துப்போதல், முதலிய சமஸ்த நோய்களை வேருடன் ஒழித்து மேக ரோகப்பூண்டை தலை எடுக்காமல் செய்வதில் இது மிகச் சிறந்த திவ்ய அமிர்தத்திற்கொப்பான ஔஷதமாகும். இந்த ஔஷதத்தை ஸ்திரீ புருஷர் முதலிய அனைவரும் எவ்விதமான வெகுட்டல், குமட்டல் ஓக்காளித்தல் முதலியனவின்றிச் சுகமாய் சாப்பிடுவதற்கு ஏற்றபடி செய்யப்பட்டிருக்கிறது. யாதொரு பத்தியமுமின்றி உபயோகிக்கலாம். இந்த கல்பத்தில் ஒரு புட்டி உபயோகித்துவந்தால் உடலிலிருந்த சர்வ மேகரோகங்களும் பறந்துபோய் ஆச்சரியப் படும்படியான தாதுவிருத்தியும் ரத்த சுத்தியும் செய்து நல்ல நிலைமையில் கொண்டுவந்து விடுவதில் மிகவும் புகழ்பெற்ற பரம ஔஷதம். முழுபலன் அடையக்கூடிய

60 நாள் சாப்பிடக்கூடியது புட்டி 1-க்கு ரூ. 5.

30 நாள் சாப்பிடக்கூடியது புட்டி 1-க்கு ரூ. 3.

டை கல்பம் உள்ளுக்கு உபயோகித்துவந்தால், மேல் ரணங்களுக்கு உபயோகப்படுத்த (மேல் பூச்சுக்கு) மேகரண சஞ்சீவிலேபம் உபயோகித்து வந்தால் ரணங்கள் முற்றிலும் ஆறிவிடும். டை சஞ்சீவி லேபம் புட்டி அணா 8.

## புஷ்பகாந்த செண்ட்

நீங்காத, மனேஉல்லாசத்தை விரும்புவர்களுக்கு இந்த புஷ்பகாந்த செண்ட் முதல்தரமானது. இதனை 2, 3, துளிகள் கைகுட்டைகளிலாவது, அங்கவஸ்திரங்களிலாவது, படுக்கையறையிலாவது தடவப்படுமாகுல் நாலைந்து நாட்கள் வரையில் இதனுடைய சுவாசனை நீங்காது. எல்லோருடைய மனதையும் சந்தோஷிக்கச்செய்யும். ஒருமுறை வாங்கிப் பார்த்தால் உண்மை அறியமுடியும்.

விலை புட்டி 1-க்கு அணா 12.

# க ல் யா ணி கி ரு த ம்

## கர்ப்பாசயத்தைச் சார்ந்த ரோகங்களை குணப்படுத்துவதில் இது ஓர் உத்தரவாதமானதும், அமிர்தம் போன்றதுமான கைகண்ட திவ்ய ஔஷதம்

ஸ்திரீகள கட்டு தளராமலும் அழகு குன்றாமலும் இருக்கவேண்டுமானால் மாதாமாதம் கிரமந் தப்பாமல் மாதவிடாய் ஆகிவிடுகின்றதா வென்பதையே மிக முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். ஏனெனில், ஸ்திரீகளுக்கு 100-க்கு 75-வியாதிகள் சூதகக்கோளாறு சம்பந்தமானவைகளே யென்பது வைத்திய சாஸ்திரத் துணிபு. இதனால் ஸ்திரீகளின் சரீரம் ஸ்தூலித்து, வீட்டு விலக்கம் தவறி, நெடுநாள் கர்ப்பந்தரிக்காமலேயே இருக்கும். சூதககாலத்தில் ரத்தம் சிறிது கண்டு மறைதல், சூதகம் சிறுவயதிலேயே நின்று திரேகம் ஸ்தூலமடைதல், கட்டிமுட்டியாகவும் கறுப்பாகவும் உதிரம் வெளிப்படுதல், சோர்வு, மயக்கம், தலைசுற்றல், தலைபாரம், இடுப்புவலி, குன்மம், அஜீர்ணம், தொடை கணுக்கால் முதலிய இடங்களின்வலி, தேகமெங்கும் ஒடி ஒடிக் குத்துதல், குடைச்சலேற்படுதல், ஒருபக்கத் தலைவலி, சூதக வயிற்று வலியால் புழுப்போல் துடித்தல், மேகவாய்வு, வயிற்றில் சூதகக்கட்டிபோல் தோன்றுதல் முதலிய சர்வ சூதகசம்பந்தமான நோய்களை நிர்மூலப்படுத்துவதில் இந்தக் கல்யாணி கிருதம் வரப்பிரசாதம் பெற்றது. தூர்த்த ஆண்களால் தங்கள் மனைவிகளுக்கு அளிக்கப்படும் மேகநோயும், அதன் கொடுமைகளும், ஒரே குழந்தைக்குப்பின் குழந்தை உண்டாகாமலிருத்தல் போன்றதையும் நீக்கி சற்புத்திர சந்தானங்களை யுண்டாக்கும். 2, 3, மாதம் கர்ப்பம் நின்று சிதைந்துபோவதும் இதனால் நீங்கிவிடும். கர்ப்பப் பையை இது நன்கு பலப்படுத்திவிடும். இதனுடன் வனிதாகல்பம் என்ற மருந்தையும் சேர்த்துச் சாப்பிடுவந்தால் ஸ்திரீகளுக்குள்ள சர்வ சூதக சம்பந்தமான வியாதிகளை நிச்சயமாக நீங்கிவிடுமென்று உறுதி கூறுகிறோம். இந்த இரு ஔஷதங்களையும் பந்தயங்கட்டிப் பரீக்ஷித்துப் பார்த்துக்கொள்ளுங்கள். இதைவிட உயர்தரமான ஔஷதங்கள் வேறெங்குமே கிடைக்காதென்று தங்களுடைய மனதே புகழ்ந்து கூற நேரிடும்.

புட்டி 1-க்கு ரூபா 2.

கவனிப்பு.—ஒரே காலத்தில் 1-புட்டி கல்யாணி கிருதமும், 1-புட்டி வனிதா கல்பமும் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு ரூ. 3 8 0

# வ னி தா க ல் ப ம்

## (மெலிந்த ஸ்திரீகளுக்கு அமிர்தத்திற்கு ஒப்பான திவ்விய ஔஷதம்)

மேற்கண்ட கல்யாணி கிருதம் போக்குமென்று மேல் எடுத்துக் காட்டியிருக்கும் சர்வ ரோகங்களும் எளிதில் போகக்கூடிய ரோகங்களல்ல. ஆனால்



அவ்வளவு நோய்களையும் பறக்கடிக்கச்செய்ய அதி அற்புத முறையில் மிகுந்த பிரயாசையின்மீதும், ஏராளமான பணச்செலவில் தயாரித்த கலியாணிகிருதம் மேற்படி நோய்களையும் வேரோடு களைந்தெறியுமென்பது உபயோகித்த பின்னரே தெரியவரும். அதுபோன்று சரீரத்தில் இரத்தமின்றி மெலிந்து பலஹீனமடைந்து, மர்மஸ்தானத்தில் எரிச்சல், வெள்ளை நீர்க்கசிவு, சூதக சமயத்தில் பெரும்பாடு, சரீர உஷ்ணம் முதலிய வியாதிகளில் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும் ஸ்திரீகளுக்கு, இந்த வனிதாகல்பம் வரப்பிரசாதம் போன்ற ஓர் பரம ஔஷதமாகும். இதை உட்கொண்டுவரும் ஸ்திரீகளின் திரேகம் எவ்வளவு அழகு வாய்ந்ததாய் விடுமென்று எம்மால் சொல்லமுடியாது. அனுபவித்தறிந்தவர்களே உண்மை கண்டறியலாம். 1-புட்டி ரூ. 2.

கவனிப்பு:—ஒரே தடவையில் 1-புட்டி வனிதா கல்பமும், 1-புட்டி கல்யாணி கிருதமும் ஆர்டர் செய்பவர்களுக்கு விலை ரூபா 3 8 0

# வாதரோக சம்ஹாரி

## (வாய்வு ரோகங்களுக்கு சிறந்த ஔஷதம்)

வாய்வு பிடித்த மனிதன் சதா சோம்பலுள்ளவனாகவே யிருப்பதுடன், உடலெங்கும் பிடிப்பும், நோயும், அசதியும் மிகுந்தவனா யிருப்பான். சரீர முழுதும் சிலருக்கு வாய்வு பரவிப் பெருந் தொந்தரவை உண்டுபண்ணும். முழங்கால் முழங்கையில் வாய்வு தங்கிப் பெருங்குடைச்சலுண்டாக்குதல், மூட்டுகளில் நீர் தங்கி வலியெடுத்தல், கைகால்களை நீட்டவும் மடக்கவும், முடியாமலாக்கிவிடுதல், கைகால் சந்துக்களில் வலி காணுதல், குதிக்கால் ரணமாய் நோவுதல், மூட்டுகள் வீங்கிவிடுதல். தொடைகள் பச்சைப்புண்ணாய் வலித்தல், உடம்பு பருத்தல், மலபந்த முண்டாகுதல், அபானவாய்வு அடிக்கடி பரிதல், வயிறு உப்புதல், மேல்மூச்சு மார்புவலி உண்டாகுதல், ஓடுவாய்வு, அண்டவாய்வு, மேகவாய்வு முதலாக பற்பல விதமாய் சொல்லப்பட்ட அவரவர் திரேக கூறுக்குத் தக்கபடி உண்டாகும் எல்லா வாய்வு ரோகங்களுக்கும் எங்கள் வாதரோக சம்ஹாரி சிம்ஹவீரம் பொருந்தியது. இம்மருந்தை சரீர திடம் அறிந்து 3-அல்லது 5-நாட்கள் உபயோகித்தால் நோயென்பதையே தலை யெடுக்கவொட்டாமற் செய்துவிடும் என்று, உறுதி கூறுகிறோம். ஸ்திரீ புருஷர் யாவரும் நிர்ப்பயமாய் உபயோகிக்கலாம். புட்டி 1-க்கு ரூபா 2.

# சுவாஸகாஸ நிவாரணி

கபம் அதிகரிப்பதினால் சுவாஸகாஸ நோய் ஏற்படுகின்றது. அதிலும் இந்நோய் பனிக்காலங்களில் அதிகரித்துவிடும். இதனால் நெஞ்சில் கோழையும் கபமும் அதிகரித்து நெஞ்சில் கர்குர் என்னும் சப்தத்துடன் மூச்சு மேலும் கீழுமாகபோய், கண் கைகால்களை அசைக்கமுடியாமல் பிராணாவஸ்

தையை உண்டு பண்ணிவிடும். இந்த நோய் மழைக்காலத்திலும், பனிக் காலத்திலும், அதிகமாகும் தன்மை யுடையதாதலால், நின்று விட்டதே யென்றிராமல், மீண்டும் வந்து விடுவதற்குள் எங்கள் சுவாஸகாஸ நிவாரணியை விடாமல் சேவித்து வந்தால் இந்நோய் பறக்கும். சுவாஸகாஸ ரோகத்தை அடியோடு ஒழித்து விடுவதில் மிகவும் சிறந்தது.

புட்டி 1-க்கு விலை ரூபா 2.

## பவழ பஸ்பம்

கைபாகம் செய்பாகம் சற்றும் தவறாமல் அரிய மூலிகைகளைக்கொண்டு, உயர்ந்த முறையில் இந்த பஸ்பம் தயாரிக்கப்படுவதால், கப சம்பந்தமான எல்லாவியாதிகளையும் போக்குவதில் இது தலை சிறந்து விளங்குகிறதென்பது நம் அனுபவம். எம் வைத்திய நிலயத்தில் தயாரிக்கப்படும் எந்த மருந்தும், லேகியமும் தைலமும் சுத்தமாயும் அரிய முறைப்படியும் பஸ்பங்கள் அனைத்தும் ஏராளமான புடங்கள் யிட்டு செய்யப்படுகின்றனவாகையால் நல்ல பயனளிக்குமென்று உறுதி கூறுகிறோம். இந்தப் பவழபஸ்பத்தை க்ஷயம், காசம, இளைப்பு, இருமல், முதலியவைகளுக்குத் தனியாகவேனும் சுவாஸகாஸ நிவாரணியுடன் சேர்த்தேனும் உட்கொள்ளலாம். ஒன்றிரண்டு வேளையிலேயே குணம் சுகமாய்த் தெரிந்துவிடும். கட்டிப்போன சளியைக்கரைத்து சுலபமாக மூச்சுவிடவும் வாங்கவும் வசதி செய்யும். சரீர உஷ்ணத்தைப்போக்கி கபத்துடன் கூடிய இருமலையும் வறட்சி இருமலையும் பேர்க்குவதில் இம்மருந்து வல்லமை வாய்ந்ததென்றே கூறலாம். சுவாஸ சம்பந்தமான சர்வ நோய்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமேயாகும். சாதாரண இருமல் முதல் கடினமான இருமலையுங்கூட செய், தேன் அனுபானத்திலேயே போக்கிவிடும். 1-புட்டி ரூ. 2.

## பிரமே காந்தகன்

### வெள்ளை (Gonorrhoea) என்னும் வேதனைக்கு

### ஓர் அற்புதமான மருந்து

அமிதமாகப் போகம் செய்தல், இயற்கைக்கு விரோதமாக குதப் புணர்ச்சி, மாதவிடாய் ஸ்திரீகளுடன் புணர்ச்சி, மேகரோக நோய்களிடம் புணர்ச்சி, மிருகப்புணர்ச்சி முதலியவைகளினால் பிரமேக நோய்கள் ஏற்படுகின்றன. புருஷருக்கு ஆண் குறியில் மூத்திரத் துவாரத்திலிருந்தும், ஸ்திரீகளுக்கு கர்ப்பப்பையிலிருந்து மர்மஸ்தானவழியாயும் வெள்ளை ஒழுகும். உடனே இது கவனிக்கப்படாவிடில், வெள்ளை மஞ்சளாகி இரத்தமிறங்கும். அதற்குமேல் அரையாப்புக்கட்டி, யோனிப்புற்று, லிங்கப்புற்று, கடிவாதம், கடியம் முதலிய பெரிய வியாதிகள் ஏற்பட்டு தேகம் மெலியும்.



இந்த நோய் வந்தால் நீர் நிறம்மாறும். எரிச்சலும் வலியும் காணும். அரிசிமாவைக் கரைத்ததுபோலும், மோர், தயிர், பால்போலும் சிறுநீரிறங்கும். ஸ்திரீகளுக்கு பழுப்பு ஒழுக்கு நூல்போலுமிறங்கும். எனவே இப்படிப்பட்ட வெள்ளை நோயென்னும் கள்ளநோயால் அவதிப்படுவோர் அநியாயமாகப் போலி விளம்பரங்களைப்பார்த்து, அனேக பச்சிலைத் தைலங்களையும், ரஸ கெந்தாதி பாஷாண சம்பந்தமான ஔஷதங்களையும் உட்கொண்டு நோய் குணமாவதற்குப் பதிலாக ஒன்றுபோய் மற்றொன்றுவரப் பெறுகின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த மருந்தை வாங்கிச் சேவித்தார்களானால் புருஷர்களாயினும் சரி, ஸ்திரீகளாயினும் சரி, எத்தனை வருஷகாலமாக அவதிப்பட்டு வந்தாலும் சரி, எப்படிப்பட்ட பிரமேகமானாலும் சரி, கட்டாயமாய்ச் சுகப்படுத்தி மேலும் வராமல் செய்வதில் இதுமிகச் சிறந்த பரம ஔஷதமாகும். வெள்ளை நோய்க்கு இதைவிடச் சிறந்த ஔஷதம் வேறெதுமே இல்லை.

புட்டி 1-க்கு விலை ரூபா 2.

## அயஸ்காந்த சத்தின் திராவகம்

ரத்தக் குறைவு, பித்தபாண்டு, மஞ்சட்காமாலை, மலைஜுரம், விஷஜுரம், சன்னிபாதஜுரம், மலேரியா ஜுரம் முதலியவைகளால் ரத்தஞ் சுண்டி தேகம் வெளுத்து, மெலிந்துபோனவர்களும், மேகரோககளாயும், பிரமேக நோய்களாயும், மற்றும்பல நோய்களாயும், அவதிப்பட்டு பலஹீனமடைந்து விட்டவர்களும், தாது விருத்தி மருந்துகள் பலதும் சாப்பிட்டும் பயனடையாதவர்களும், இதனை உட்கொண்டால், உடம்பிலுள்ள ஒவ்வொரு நரம்பிற்கும் ஜீவ சக்தியையூட்டி, பலமடையச்செய்து, கைகால் இடுப்பு முதலிய இடங்களின் அசதியை நீக்கி, வெளுத்த கன்னங்கள் சிவந்து, இரத்த மேரச்செய்து, வியாதியே வராத திடகாத்திர நல்ல யௌவன வாலிபன் போன்று, முடுக்காய் கைகளை வீசி நடக்கவேண்டுமானால் எமது அயஸ்காந்த சத்தின் திராவகத்தில் ஒரு புட்டி வரவழைத்து உபயோகித்துப் பார்த்தீர்களானால், இதற்கு நிகரான மருந்து இவ்வுலகில் வேறொன்றும் உண்டோ என்று ஆச்சரியமடைவீர்கள். “இளைத்தவன் இரும்பைத் தின்னவேண்டும்” என்பது பெரியோர் மொழியல்லவா? இன்பமான வாழ்க்கையும், ஆரோக்கியமும் சந்தோஷமும் நிறைந்த வாழ்க்கையும் வாழவேண்டுமானால் இந்த ஔஷதத்தைக் கட்டாயம் உட்கொள்ளவேண்டும். புட்டி 1-க்கு விலை ரூ. 1-12-0.

## சூரியகாந்தி தைலம்

எலும்பும் தோலுமாய் நாளுக்குநாள் ஈடேறுமற்போகும் கணரோகமுடைய பாலர்களுக்கும், மேகவெட்டையால் தேகமெலிந்து போகும் யௌவனர்களுக்கும், பெற்றோருக்கும் மேகவெட்டை இருந்தால், அதன் கெடுதியால் குழந்தைகளுக்கும் பற்றி நிற்கும். சதா இடைவிடாத கணச்சூடும்

வெட்டைச்சூடும் குழந்தைகளுக்குப் பற்றியிருக்கும். தாய் தந்தையருடைய கர்ப்பத்திலேயே ஊறிப் போவதால் குழந்தைகள் சதா எலும்பும் தோலுமாய் சதைப்பற்று என்பதில்லாமல் தேவாங்குகளே போன்று கிடக்கும். மார்பில் கூண்டுகட்டி, வாய்ரிணம், சொறி சிரங்கு உண்டாகுதல், உடம்பு எப்போதும் உஷ்ணமாகவே யிருக்குதல், நாளுக்குநாள் இளைத்து தேரைக்கையும் தேரைக் காலுமாய்க் கிடக்கும், அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு எங்கள் சூரியகாந்தி தைலம் இந்நோய்களனைத்தையும் அடியுடன் ஓட்டி, குழந்தைகளுக்குச் சதை பிடிக்கச்செய்து குழந்தைகளைக் காப்பாற்றுவதில் இது சஞ்சீவிக்குச் சமான மானது. ஒரேமுறை பரீக்ஷித்துவிட்டால் தாய்மார்கள் இந்த எண்ணெயை வாங்காமலிருக்கமாட்டார்கள் இது சத்தியம். புட்டி 1-க்கு ரூபா 1 12 0

# மேகநாத பஸ்பம்

விசேஷித்த முறையில் அபூர்வ மலை மூலிகைகளைக்கொண்டு மிஸ்மரித்து புடம்போடப்பட்டு இந்த பஸ்பம் செய்யப்படுகின்றது. வெள்ளி பஸ்பத்தைவிடச் சிறந்த குணமுள்ளது. இதனால் வயிற்றில் நமநமவென்று நோக்காடு, வயிற்றிரைச்சல், உஷ்ணவாய்வு வயிற்றில் சேருதல், இரைப்பை அயற்சி, வெள்ளை விழுதல், இரத்தக்கொதிப்பு, மூலச்சூடு, வறட்சி இருமல், சுக்கிலம் நீர்போல் நீத்துப்போதல், எதிலும் தீராத சொப்பனஸ்கலிதம் மூத்திரக்கிரிச்சனம், வாய்ப்புண், வாய்நாற்றம். வாயிலும் பல்லிலும் இரத்தம்வருதல் எலும்புருக்கிபோன்ற சகல உஷ்ணரோகங்களையும், நிரந்தரமாயும் நிச்சயமாயும் போக்கிவிடுவதில், மஹா சக்தி பொருந்தியது. இதை ஜீவானந்த வீரியவிருத்தி ரசாயனத்தில் வைத்துச் சேவித்து வந்தால் அபாரமாக வேலை செய்துவரும். விலை புட்டி 1-க்கு ரூ. 2.

# அயஸ்க்காந்த செந்தூரம்

இச் செந்தூரம் அரிய முறைப்படி தயார் செய்யப்பெற்ற உத்தம ஔஷதமாகையால் ஸ்திரீ புருஷர் இருபாலரும் சர்வ சாதாரணமாக உபயோகப்படுத்தலாம். 'இளைத்தவன் இரும்பைத் தின்னவேண்டும்' என்னும் ஆன்றோர் மொழிப்படி, எவ்வித நோயிலாவது அவஸ்தைப்பட்டு சரீரம் வெளுத்து, இரத்தங் குறைந்து, நகக்கண்களும், கண்களும், வெளுத்து அன்னத்துவேஷம், அக்கினி மந்தம், அசதி, சோம்பல், பித்தசோகை, பித்தபாண்டு முதலியவைகளுக்கு இச் செந்தூரத்தை எண்ணிக்கையாக 15-நாட்கள் காலை, மாலை இருவேளையும் சாப்பிட நல்ல இரத்த விருத்தியை உண்டாகச்செய்யும். வெளுத்த தேகம் சிவப்பாகும். நரைத்த மயிர் கருக்கும். நல்ல ஜீரண சக்தியை உண்டாக்கச் செய்யும். சதாநோயும் பாயுமாய்க் கிடக்கும் நோயாளிகளை தூக்கிவிடுவதில் இந்த அயஸ்காந்த செந்தூரம் கீர்த்தி பெற்றது. தாதுபுஷ்டிக்காக பல மருந்துகளை உபயோகித்து பயனடையாதவர்கள், எமது ஜீவானந்த வீரிய



விருத்தி ரசாயனத்தோடு இந்த செந்தூரத்தை சேர்த்து உபயோகப்படுத்த கண்டிதமாய் பலன் ஏற்படும். பித்தவாய்வு சம்பந்தமான உபாதையுள்ளவர்கள் எமது பித்தரோக மர்த்தனியில் கூட்டிச் சாப்பிட்டுவர மிக்க சுலபத்தில் நோய் நீங்கி சுகம்பெறலாம். விலை புட்டி 1-க்கு ரூபா 3.

# வஜ்ரதந்த திராவகம்

## பல் வேதனை, பல்குத்து முதலானவைகளுக்கு சிறந்த மருந்து

சகிக்க முடியாத பல்வேதனை, பல் ஜிவ்ஜிவ்வென்று குடைச்சல், பல்குத்து முதலிய வேதனைகளுக்கு, நோயுள்ள இடத்தில் இந்தத் திராவகத்தை பஞ்சிலெடுத்து 2, 3, சொட்டு வைத்தவுடனே சகிக்க முடியாத அவ்வளவு வேதனையும் அந்த நிமிஷமே குணமாகும். ஈறு வீங்கி நீரினாலுண்டாகும் வலி, பல் கூச்சம், பல் அசைவு, இரத்தம் சீழ் முதலியன் பற்களிலிருந்து வருதல் முதலிய சர்வ பல் ரோகங்களும் இந்தத் திராவகத்தினால் கண்டிப்பாகத்தீரும். இதனுடன் எங்கள் லக்ஷ்மீநாராயண பல்பொடியைக்கொண்டு உபயோகித்து வந்தால் பற்களைச்சார்ந்த எவ்வித ரோகமும் ஏற்படாது. பற்கள் இரும்பைப்போல் உறுதியாயும் முத்துப்போல் வெண்மையாயும் இருக்கும்.

விலை புட்டி 1-க்கு அணா 8.

# லக்ஷ்மீநாராயண பல்பொடி

பற்களில் காணும் சர்வ நோய்களுக்கும் இது ராஜா. பல் ஆட்டம், ஈறு கெடுதல், வளருதல், பல்லிலிருந்து இரத்தம் சீழ் முதலியன கசிதல், பல் ஜிலுஜிலுப்பு, சொத்தை, வாய்நாற்றம் முதலியவைகளை இந்தப் பற்பொடியினால் கட்டாயமாய் நீங்கிவிடும். இப் பல்பொடி பற்களை கெட்டிப்படுத்தும் நல்ல குணம்வாய்ந்துள்ள மலைமூலிகை வேர்களும், பட்டைகளும், கடைச் சரக்குகளும் காரமுள்ள வாசனை சாமான்களும் சேர்த்தே இது செய்யப்பட்டு வருவதால் இதனையே உபயோகித்து வந்தால் பற்களைச்சார்ந்த சர்வ நோய்களும் சூரியனைக்கண்ட பனிபோல் விலகும். இதன் முக்கிய குணவிசேஷம் என்னவென்றால், காயம்பட்ட இடங்களில் இந்தப் பொடியை கொஞ்சம் எடுத்து அழுத்தினால் ரத்தம் வருவது நின்றுவிடும். இதுபோன்றே இதன் குணங்களை நன்கு தெரியலாம். விலை டப்பி 1-க்கு அணா 4

# இரகசிய சுகானந்தன்

ஸ்திரீயினிடம் நோயிருப்பதாக உணர்ந்தும், அந்த ஸ்திரீயை அனுபவிக்க நாடும் புருஷனும், புருஷனிடத்தில் நோயிருப்பதாகச் சந்தேகிக்கும் ஸ்திரீயும் இந்த ரப்பர் கருவிகளை உபயோகித்துக்கொண்டு ஸம்சர்க்கத்தில் ஈடுபடுவார்களானால் ஸ்திரீயின் நோய் புருஷனுக்கும், புருஷன் நோய் ஸ்தி

ரீக்கும் ஒட்டவேவொட்டாது பிள்ளைபெறுதலை நிறுத்திவிடவேண்டுமென்று எண்ணுகின்ற சக்தியற்ற ஸ்திரீகளும் இந்தக் கருவியை உபயோகிக்கலாம். நோயற்ற சுகவாழ்வை விரும்புபவர்களுக்கு இக்கருவியே ஏற்றதாகும்.

புருஷர்கள் உபயோகிக்கும் கருவி விலை ரூபா 1.
ஸ்திரீகள் உபயோகிக்கும் கருவி விலை ரூபா 3.

இவ்விரண்டும் ஒரே தடவையில் ஆர்டர் செய்தால் ரூபா 3-8-0-க்கு அனுப்பப்படும்.

# வஸந்தரஞ்சன்

## (இது வெய்யிற்காலத்திற்கு ஓர் பிராண சிநேகிதன்)

இது ஒரு நல்ல மணம் வீசக்கூடிய பரிமள ஸ்நானத்தைலம். தாதுபுஷ்டிக்காவது, மேகரோகங்களுக்காவது, மற்றெந்த உஷ்ணரோகங்களுக்காவது, மருந்துண்ணும் சமயத்திலும், வெறும் சமயத்திலும் இந்தத் தைலத்தைக் கொண்டு ஸ்நானம் செய்துவந்தால் சகலவிதமான உஷ்ணத்தையும் தணித்துவிடும். இதைக்கொண்டு ஸ்நானம் செய்துவருவதால், கண்பார்வை மங்கல், மூளைக்கொதிப்பு, கைகால் எரிச்சல், மேககாங்கை கண்எரிச்சல், தேகக்கொதிப்பு, இரத்தக்கொதிப்பு, காதிரைச்சல், கண்ணோய், இமையரிப்பு, பீளை சேர்ந்துகொண்டே யிருத்தல், உஷ்ணமிகுதியால் நாசியில் நீர்வடிதல், இரத்தம் வடிதல், கண் சிவத்தல், கண்கள் அனலாயிருத்தல், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், உஷ்ணத்தின்பேரில் தலைவலி, பித்தமயக்கம், தலைகிறுகிறுப்பு முதலிய கண்டத்திற்கு மேற்பட்ட எல்லா உஷ்ணசம்பந்தமான வியாதிகளையும், முற்றிலும் குணப்படுத்தி, மயிர் கால்கள் குளிரச்செய்து தலைமயிர் நரைப்பதையும், மயிர் விழுவதையும் நிறுத்தி, கண்கள் குளிர்ந்து பிரகாசிக்கும்.

கவனிப்பு:—வக்கீல்கள், மாணவர்கள், உபாத்தியாயர்கள், கணக்கப்பிள்ளைகள் முதலிய எப்பொழுதும் மூளைக்கு அதிக வேலை கொடுக்கின்றவர்கள் இத்தைலத்தை உபயோகித்துக் கொண்டு வந்தால் மிகவும் நன்று.

விலை புட்டி 1-க்கு ரூபா 1

# நயனபிந்து

## (சகலவித நேத்திர ரோகங்களுக்கு ஓர் சஞ்சீவி)

சர்வ கண்ரோகங்களுக்கும் கிடைப்பதற்கரிய சஞ்சீவியே போன்ற இம்மருந்தை சிறுகுழந்தைமுதல் கிழவர்வரை யாதொரு பயமில்லாமல் எவ்விதக் கண் சம்பந்தமான நோய்க்கும் உபயோகிக்கலாம். கண்ணோய், கண்கூச்சம், கண்குத்தல், கண்ணில் நீர்வடிதல், அந்திமாலை, கண்ணில் பூவிழுதல், சதைவளர்தல், கண்எரிச்சல், நீர்படல் முதலிய கண்ணைச்சார்ந்த சகல வியாதியையும் இந்த ஔஷதம் கண்டிப்பதில் பெயர் பெற்றது. இந்த மருந்தை உபயோகிக்கும்போது மேல்குறிப்பிட்ட வசந்தரஞ்சன் என்னும் தைலத்தைக் கொண்டு ஸ்நானம் செய்துகொண்டு வந்தால் கண்ணைச்சார்ந்த எவ்வித ரோகமும் குணப்படும் என்பதில் ஆக்ஷேபம் இல்லை.



விலை புட்டி 1-க்கு அணா 8.

# தேள்கடி நிவாரணி

(அவசியம் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டிய மருந்து)

கரப்பு, வெள்ளை மருந்தென்று ஏங்கவேண்டாம்.

அன்பர்களே! ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

இதை பலவிதமான கடிவிஷ ஜந்துகளுக்கும், வேறுபல ரோகங்களுக்கும் கைகண்ட ஒரு சித்தாம்ருதம்.

இதுவரை தேள் கடிக்காக கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள் உலகத்திலே எத்தனையோ இருக்கின்றன. அவைகளெல்லாம் எமது ஔஷதத்திற்கு சிறிதும் சமத்துவமாகாது. ஆனால் அற்புத குணமும் எதற்கும் இணையில்லாததுமாகிய எங்கள் மலேயாள தேசத்தில் கிடைக்கக்கூடிய பச்சிலை ரசத்தைக்கொண்டு காய்ச்சி எடுத்த மருந்தை கொட்டுவாயில் வைத்து தேய்த்தவுடனே அழுது துடிதுடித்து அய்யோ அம்மாவென்று அலறிக்கொண்டு வருபவர்கள் வலி நீங்கிச் சிரித்துக்கொண்டே செல்வார்கள். அதை அனுபவத்தில் காணலாம். மருந்துடன் அனுப்பப்படும் நோட்டீசில் குறித்திருக்கும்படி துளிக்கணக்கில் உபயோகப்படுத்தி, நிமிஷக்கணக்கில் சுகம்கண்டு, தங்களுடைய பந்துமித்திரர்களுக்கும் சிபார்ஸ்செய்ய வேண்டுகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| பெரிய சய்ஸ் புட்டி 1-க்கு | 1 | 0 | 0 |
| சின்ன சய்ஸ் புட்டி 1-க்கு | 0 | 12 | 0 |

# போக சோக ரஞ்சனி

பலர் சிற்றின்ப விஷயத்திலீடுபட்டுப் பின்னர் சோர்ந்து விடுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் இந்தமருந்தில் அரைரூபாஎடை எடுத்து வாயில்போட்டு பாலோ, சுத்தஜலமோ குடித்துவிட்டால் சம்போகத்தினால் ஏற்படும் நீர்சுருக்கு, கைகால் அசதி, உஷ்ணம் முதலியவைகள் உண்டாகாது. போக அயர்ச்சி நீங்கி, மறுபடியும் உடனே சுறுசுறுப்பும் பலமும் உண்டாகிவிடும். இம்மருந்தை நீடித்து சாப்பிட்டு வந்தால் பற்பல ரோகங்கள் நீங்கி, தாதுவிருத்தி உண்டாக்கச் செய்யும். விலை புட்டி 1-க்கு ரூபா 2—0—0.

மலையாள மனோ உல்லாச

## கூந்தல் வளரும் பரிமளத் தைலம்



இந்த பரிமளத் தைலத்தின் மணத்தையும், குணத்தையும் பற்றி இங்கே எழுத இடமில்லை. வெளியூர் நேயர்கள் ஒரே தரம் இந்த மலையாள வனமூலிகைகளைக்கொண்டு தயார் செய்யப்பட்ட மனோ உல்லாச கூந்தல் தைலத்தை வாங்கி உபயோகித்துப் பார்ப்பீர்களானால் இது வரையில் தாங்கள் அனுபவித்து வந்த தைலங்களெல்லாம் மணத்திலும், குணத்திலும் இதற்கு ஈடாகாதென்று அவரவர்களுடைய மனதே புகழ்ந்து கூறச் செய்யும். சிரசைப்பற்றிய சகல வியாதிகளையும் அறவே போக்கி, மூளையின் உஷ்ணத்தை குளிரச்செய்து, சுண்டு, பேன், ஈர், சொரி சிரங்கு முதலிய ஓர்வித நமை உண்டாகாமல், மலையாள ஸ்திரீகளின் கூந்தலைப்போல் வளரச்செய்து ரோமத்திற்கு பளபளப்பும், கருநிறத்தையும் உண்டு பண்ணும். விலை புட்டி 1-க்கு ரூபா 1.

## இராஜவிரேசன குளிகை

பல இடங்களில் அனேக பேதி மருந்துகள் கிடைக்கின்றன வெனினும் சுகமாகப் பேதியாவதில்லை. குமட்டலெடுக்கும், ஆசனக் கடுப்பும் வயிற்று வலியும் உண்டாகிவிடும். ஆனால், எங்கள் குளிகைகள் குடலில் பலநாட்களாய் அடைந்துகிடக்கும் பழைய மலங்களைப்போக்கி, குமட்டல், வாந்தி, ஓக்காளம், வயிற்றுவலி, ஆசனக்கடுப்பு, போன்ற தொந்தரவுகளில்லாமல் வெகு சுகமாய் பேதியாக விசேஷ முறையில் மிகுந்த பிரயாசையுடன் கண்டு பிடிக்கப்பட்டவைகளாகும். ஜுரம் வந்து பேதியாக விரும்புவோரும், சுகுமாரதேகிகளும்கூட இதனைச் சாப்பிடலாம். புட்டி 1-க்கு விலை அணா 8.

விலாசம்:—

**மலையாள வைத்திய நிலயம்,**
தபால் பெட்டி நெ. 53, மதராஸ்.





# தமிழ்க் கடல் பிரசுரங்கள்

| | | அ. | பை |
|---|---|---|---|
| 1 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - I | 2 | 6 |
| 2 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - II | 3 | 6 |
| 3 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - III | 4 | 0 |
| | குட்டிக் கதைகள் - முதற் புத்தகம் | 2 | 0 |
| 4 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - IV | 5 | 0 |
| | குட்டிக் கதைகள் - இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| | ஆகாய விமானம் | 2 | 0 |
| | சிறுவர் கடமை | 2 | 6 |
| 5 வகுப்பு : | ஆரம்ப வாசகம் - V | 6 | 0 |
| | குட்டிக் கதைகள் - மூன்றாம் புத்தகம் | 4 | 0 |
| | சிறுவர் கடமை | 2 | 6 |
| | பெரிய உலகத்துச் சிறிய பிள்ளைகள் | 5 | 0 |
| I பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - முதற் புத்தகம் | 7 | 0 |
| | சிறுவர் கதைகள் - முதற் புத்தகம் | 3 | 0 |
| II பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - இரண்டாம் புத்தகம் | 8 | 0 |
| | சிறுவர் கதைகள் - இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| III பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - மூன்றாம் புத்தகம் | 8 | 0 |
| | சிறுவர் கதைகள் - மூன்றாம் புத்தகம் | 4 | 0 |
| | உடல் நலம் | 4 | 6 |
| IV பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - நான்காம் புத்தகம் | 10 | 0 |
| | லண்டன் மாநகரம் | 6 | 0 |
| IV பாரம் - | மேல் நாட்டுப் பேரறிஞர் | 10 | 0 |

**தமிழ்க் கடல் ஆபீஸ்**

சாந்தோம் - மயிலை, சென்னை

ரிஜிஸ்டர் நெ. 2912

# ஜீவாம்ருதம்

## பலஹீனம்

அல்லது

## நரம்புத் தளர்ச்சிக்கு கைகண்ட ஒளஷதம்




உங்களுக்கு வேலை அதிகமாயிருக்கிறது. ஆயினும் வேலை செய்யமுடியவில்லை. காரணம் பலக்குறைவு. சரீரம் சோர்வடைகிறது உலக இன்பங்களில் ஈடுபட முடிகிறதில்லை. வயது அதிகம் ஆகவில்லை. ஆனால் வயதிற்குத்தக்க சுறுசுறுப்பும் ஜீவசக்தியும் இல்லாமல் ஏக்கங்கொள்ள வேண்டியதாயிருக்கிறதல்லவா? இந்த மனோசஞ்சலத்தை ஒரு பாட்டில் ஜீவாமிருதத்தைக் கொண்டு தகர்த்தெறியுங்கள். ஜீவாமிருதத்தை உட்கொண்டவர்கள் கவலையின்றி சுகமாக வாழ்கிறார்கள். வாழ்வின் பூர்ண பலன் அனுபவிக்க ஜீவாமிருதத்தைவிட உயர்ந்த நண்பன் வேறு கிடையாது.

எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :— ஆயுர்வேதாஸ்ரமம், தபால்பெட்டி நெ. 287, மதராஸ்.

பி. வீரராகவன், அவர்களால், சென்னை மண்ணடி, புதுத் தெரு, நெ. 94-95, இல்லத்தில் "அஸோஸியேஷன்" அச்சுக் கூடத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.